

91. யுத்த காண்டத்திலே

(இருவர் போன வழி)

கம்பனுடைய யுத்த காண்டம் 'கடல் காண் படல'த்துடன் தொடங்கி 'விடை கொடுத்த படல'த்துடன் முப்பத்தேழு படலங்களில் முற்றுப் பெறுகின்றது. ஆதிகாவியத்திலே, கடல் காணும் ராமன் சீதையை நினைத்து வருந்துவது ஐந்தாம் ஸர்க்கத்தில் வருகிறது. அயோத்தியை அடைந்த ராமனுக்கு முடிசூட்டு வைபவம் நடைபெறுகின்ற 131-ம் ஸர்க்கத்துடன் வால்மீகியின் யுத்த காண்டம் முடிவுறுகின்றது.

விஷய சூசிகையில் ஸர்க்கங்கள் — படலங்களின் தலைப்புக்களைப் பார்த்துக்கொண்டே போனாலும், இருவர் போகும் வழிகளிலுள்ள சில வேற்றுமைகள் தெரிய வரும். அந்த வேற்றுமைகளிலிருந்தே இருவர் மனப் போக்கையும் கலைப் போக்கையும் உய்த்துணர முயல்வதும் தவறாகாது.

விபீஷண குணசித்திரம்

'கடல் காண் படல'த்திற்கு அடுத்தது ராவணனுடைய மந்திராலோசனை குறித்த 'மந்திரப் படலம்'. ராவணன் மந்திரிமார்களுடன் ஆலோசிப்பது கம்பனில் ஒரே நீண்ட படலமாக அமைந்திருக்கிறது. இது வால்மீகத்தில் பதினொரு ஸர்க்கங்களில் சொல்லப்படுகிறது.

விபீஷணன் அண்ணனுக்கு நல்ல புத்தி சொல்லிப் பார்த்துக் கடைசியாக அவனை விட்டுப் போன பின், விபீஷண சரணாகதி வால்மீகத்திலே மூன்று ஸர்க்கங்களில் வருகிறது. கம்பனில் ஒரே படலம்.

இப்படலத்திற்கு முன்னும் 'மந்திரப் படல'த்திற்குப் பின்னும், 'இரணியன் வதைப் படலம்' என்னும் நீண்ட படலம் ஒன்றையும் கம்பன் படைத்திருக்கிறான். இது 'மந்திரப் படல'த்தைக் காட்டிலும், 'விபீஷணன் அடைக்கலப் படல'த்தைக் காட்டிலும் அளவில் பெரிது. பிரகலாதன் கதைதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

இந்தப் படலத்தை இங்கு வைத்திருப்பதே இருவர் போகும் வழிகளிலுள்ள முக்கிய வேறுபாடுகளுக்கு ஒரு சான்றுதான். பிரகலாதனைப் போன்ற அவ்வளவு பெரிய 'சத்யாக்கிரகி' விபீஷணன் கம்ப சித்திரத்திலே,

'உன்னுடைய நண்பனைக் காட்டு; (அவனைப் பார்த்தே) நீ எப்படிப் பட்டவன் என்பதை நான் சொல்லி விடுவேன்' என்பது ஓர் ஆங்கில அறிவு மொழி. ராமனால் சரணாகதனாகவும் நண்பனாகவும் சகோதரனாகவும் அங்கீகரிக்கப் பெற்ற விபீஷணனை மேலே சொன்னபடி உயர்த்தி,

மேதாவி கட்கெல்லாம்
மேலாய மேன்மையான்

எனக் கவிஞன் விருது கூறிக் காட்டுவது, காவிய நாயகனது குணசித்திரத்தையும் எவ்வளவோ மேலாகத் தூக்கிக் காட்டுவதுதானே?

விபீஷணனைக் குறித்துப் பலவாறு கூறுகிறார்கள், ராமன் தன்னுடைய நண்பர்களைக் கலந்து ஆலோசிக்கும் போதும். இன்றும்தான் பலர் பலவாறு கூறக் கேட்கிறோமல்லவா?

அரசனுக்குத் துரோகி யென்கிறார்கள்; அண்ணனுக்குத் துரோகி யென்கிறார்கள்; கம்பனுடைய இந்திரஜித்தும் இப்படித் தான் சொன்னான், விபீஷணனிடத்திலேயே!

அதற்கு விபீஷணனே பதில் சொல்லி யிருக்கிறான். இந்திரஜித்தன் வெறுத்துப் பகைத்துச் சிறி அறிவைப் புகைத்துக் கொண்டு பேசியதற்கு விபீஷணன் வெகு அமைதியாக, மகாத்மாக்களுக்கே உரிய மோகன முறுவல் பூத்த முகத்துடன் (மகாத்மா காந்தியின் பொக்கை வாய்ச் சிரிப்பை நினைத்துப் பார்க்கலாம்) விடையளிக்கிறான்:

துறந்திலேன் மெய்ம்மை,
எய்தும் பொய்ம்மையே
துறப்ப தல்லால்;

பிறந்திலேன் இலங்கை
வேந்தன் பின்,அவன்
பிழைத்த போதே!

[பிழைத்த போதே - பச்சாத்தாபம் சிறிதுமின்றிப் பிழைகளுக்குமேல் பிழைகளைச் செய்து கொண்டிருந்த போதே.]

'சத்தியத்தையே பின்பற்ற முயன்றேன்' என்பதைத் தமக்கு ஒரே சரம வாக்கியமாக்கிக் கொள்ள விரும்பினார் அனிபெஸன்ட் அம்மையார் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கலாம்.

'அண்ணனைத் துறந்தேனா?—அவன் தான் எனக்கு அண்ணனில்லையே, நான் தான் அவனுக்குத் தம்பியில்லையே,— அப்படி யெல்லாம் அவன் பிழைகள் செய்தபோதே!' என்றான் விபீஷணன். 'வேந்தனையா துறந்தேன்! — அவன் தான் எனக்கு வேந்தனில்லையே? — இலங்கை வேந்தன் தானே?' என்றான் இந்திரஜித்தை நோக்கி.

சத்தியாக்கிரகம் என்ற மெய்ப் பொருளுக்கு உட்பொருளல்லவா இந்த விபீஷண மகா வாக்கியம்? இந்த ஒன்றை உள்ளத்தில் நிறுத்திக் கொண்டால் போதும், கம்பன் உருவாக்கும் விபீஷண சித்திரத்தை உள்ளபடி உணர்ந்து கொள்வதற்கு.

வேறு பல வேற்றுமைகள்


யுத்த காண்டத்தின் முற்பகுதியிலே விபீஷண சரணாகதி ஒரு முக்கியமான விஷயம். இதை அடுத்து, ராவணன் சுக்கிரீவனிடம் சுகன் என்பவனைத் தூது அனுப்பும் செய்தி வருகிறது வால்மீகத்திலே. கம்ப ராமாயணத்தில், விபீஷணன் இலங்கையின் அரண் முதலான சிறப்புக்களைப் பற்றி ராமனிடம் கூறுவது குறிக்கப்படுகின்றது.

பிறகு வருணனை வழி வேண்டுவது, அந்தச் சமுத்திர ராஜன்மேல் அம்பு தொடுப்பது முதலியன. அப்பால் சேது பந்தனம்.

அணை வழியாக ராமன் முதலானோர் அக்கரை சென்று ஒரு குன்றின்மேல் தங்கியதும், ராவணன் ஒற்றர்களை அனுப்பி உளவு அறிந்து வர ஏற்பாடு செய்கிறான். பிறகு ராமன் இலங்கையைக் காண்பதும், ராமன் முதலானோரை ராவணன் காண்பதும் கம்ப ராமாயணத்தில் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. வால்மீகத்திலே வேறு சில செய்திகளும் வருகின்றன.

இந்தப் பகுதியில் வால்மீகி ராமாயணத்திலே ஒரு முக்கியமான விஷயம், ராவணன் வித்யுஜ்ஜிஹ்வன் என்ற மாயாவியான ஓர் அரக்கனைக் கொண்டு மாயை செய்து சீதையை ஏமாற்றுவது. ராமனுடைய தலை போன்ற ஒரு தலையையும், அம்போடு கூடிய ஒரு பெரு வில்லையும் அந்த அரக்கன் மாயையால் நிருமித்துக் கொண்டு, அசோக வனிகையில் சீதையுடன் பேசிக் கொண்டிருக்கும் ராவணன் முன்பாக வந்து நின்று அந்த மாயா சிரசைச் சீதை கண் முன்பாக வைத்து மறைந்து போகிறான்.





சீதை அதை நம்பித் துயரத்தில் மூழ்கிக் கைகேயியைப் பழித்துக் கொண்டு புலம்புகிறாள். பிறகு ராவணன் சேனையைத் திரட்டுகிறான். ராவணன் அசோக வனிகையிலிருந்து போன பின்பு விபீஷணன் மனைவி சீதையைத் தேற்றுகிறாள்.

இந்தக் காட்சி கம்பராமயணத்தில் காணப்படவே யில்லை. அவதார மூர்த்தியான தன் காவிய நாயகனின் தோற்றம் கூட ராட்சஸ மாயைக்குக் கட்டுப்படக் கூடும் என்பதைக் கம்பன் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை.

வால்மீகத்தைப் போல் கம்பனிலும் மாயா சீதையைத் தோற்றுவிக்கிறது இந்திரஜித்தின் மாயா சக்தி. கம்பனது கற்பனை மாயா ஜனகனையும் தோற்றுவித்து ஓர் அற்புத நாடகம் காட்டுகிறது. ஆனால் மாயா ராமனைக் கம்பனில் காணாததே, காவிய நாயகனது குண சித்திரத்தை உருவாக்குவதில் இருவருக்குமுள்ள அடிப்படை வேற்றுமைக்கு ஒரு சான்றாகும்.

யுத்த காண்டத்தி லுள்ள 'மாயா சனகப் படலம்' ஒன்றே போதும் கம்பனுக்கே உரிய கலா சிருஷ்டித் திறன் நிகரற்றதென்று காட்டுவதற்கு. ஷேக்ஸ்பியர் - நாடகங்களின் சிறந்த பகுதிகளிலே பொங்கி வரும் நாடகத் திறனையும், செஞ்சொற் கவியின்பத்தையும் 'மாயா சனகப் படல'த்திலே பருகிப் பருகி இன்புறலாம். கம்பனுடைய மேதை தன்னையும் வென்று மேலோங்கி நிற்கும் ஒரு நிலையை இங்கே காணலாம்.

சுக்கிரீவ ராவணர்களின் தொந்த யுத்தம், அங்கதன் தூது முதலியன இரண்டு காவியங்களிலும் வேறு வேறு கலைச் சித்திரங்களாகவே அமைந்துள்ளன.

இந்திரஜித்தின் நிலை

முதற் போரிலேயே ராவணனைக் கொண்டு வந்து ராமன் முன் நிறுத்தி விடுகிறான் கம்பன். வால்மீகத்திலோ அரக்க வானரர்களின் தொந்த யுத்தம், ராமனுக்கும் அரக்கனுக்கும் நடந்த

போர் முதலியன வருணிக்கப்படுவதுடன், இந்திரஜித்து நாக பாசத்தால் ராம லட்சுமணர்களைக் கட்டுவதும் வந்துவிடுகிறது. கம்ப ராமாயணத்திலோ கும்பகர்ணன் வதைக்கும் அதிகாயன் வதைக்கும் பின்பு தான் இந்திரஜித்து சண்டைக்கே வருகிறான்.

அரக்கனுக்கு உயிராகவும் வானர சேனைக்குப் பெரும் பயங்கரனாகவும் இந்திரஜித்தன் தோன்றுவதை இந்த இரு பெருங் காவியங்களிலும் காணலாம். எனினும்,

ஐயனும், 'இவனோ(டு)
எஞ்சும் ஆண்தொழில்
ஆற்றல்' என்றான்

[ஐயனும் – லட்சுமணனும். எஞ்சும் – ஒழிந்து போகும்.]

என்று வருணிக்கப் பெறுகின்ற இந்திரஜித்தன், கம்பனுடைய யுத்த காண்டத்திலே ஒரு முக்கியமான பெரும் பகுதியை அடைத்து நிற்கிறான். கம்பனில் இந்திரஜித்தன் ஒரு விசேஷ பாத்திரம்.

நாக பாசத்தைப் போக்குவதற்குக் கருடன் வருவதும், ராமனைத் தோத்திரம் செய்வதும், கம்பனைத் தத்துவ சிகரத்திலும் கவிதைச் சிகரத்திலும் ஒருங்கே வைத்துக் காட்டுகின்றன.

அல்லைச் சுருட்டி
வெயிலைப் பரப்பி
அகலாசை எங்கும்
அழியா
வில்லைச் செலுத்தி
நிலவைத் திரட்டி
விரிகின்ற சோதி
மிளிர—

[அல்லை – இருட்டை, ஆசை எங்கும்– திக்குக்களெல்லாம். அழியா – அழியாத. வில்லை – முக்கின் வளைவாகிய வில் வொளியை.]

ராவண கும்பகர்ண சித்திரங்கள்

தூம்ராக்ஷன், வஜ்ரதம்ஷ்ட்ரன், அகம்பனன், பிரகஸ்தன் முதலானவர்கள் வதமான பின்புதான் ராவணன் முதன் முதல் போருக்கு வருவதாக வால்மீகி தெரிவிக்கிறார். 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று, நிராயுத பாணியாகத் தோற்று நின்ற ராவணனை நோக்கி ராமன் கூறுவதாகக் கம்பனில் வரும் பேராண்மைப் பேச்சும் வால்மிகத்தில் காணப்படுகிறது. எனினும், தோல்வியே அறிந்திராத தன்மானத் தனி வீர மன்னனின் அந்தப் பரிபவ நிலையைக் கம்பன் வருணித்திருப்பது யுத்த காண்டத்தின் சிறப்பான பகுதிகளில் ஒன்று.

கும்பகர்ணனது குணசித்திரத்தை உருவாக்கி யிருப்பதும் கம்பனது குணசித்திர அமைப்புக் கலைத்திறனுக்கு ஒரு தனிப் பெருஞ்சான்றாகும்.

பேசுவது மானம்; இடை
பேணுவது காமம்;
கூசுவது மானுடரை;
நன்றுநம கொற்றம்!

என்று மந்திராலோசனை – மன்றத்தில் பேசியவன், தர்மத்தைக் காட்டிலும் வீர தர்மத்தையே குறிக்கோளாகக் கொண்டவன். இவனது வீர குணாதிசயத்தின் உள்ளுறை – உயிர் 'உடன்பிறப்பு'க் காதல். எனவே தான் ராவணனுக்காக உயிரைக் கொடுக்கிறான்; விபீஷணனும் க்ஷேமமாக வாழ வேணுமென்று ஆசைப்படுகிறான்; சூர்ப்பணகையையும் நிரபராதி யென்று நம்பிவிடுகிறான்.

கோபுரமும் கொடியும்

இப்படியெல்லாம் பல் வேறு மாறுதல்களை அமைத்துக் கம்பன் யுத்த காண்டத்தைத் தன்னுடைய கலைப் பெருங் கோயிலுக்கு இசைந்த தொரு கோபுரமாக்கி விடுகிறான்.

தருமமும் ஞானமும்
தவமும் வேலியாய்,
மருவரும் பெருமையும்
பொறையும் வாயிலாக்
கருணையங் கோயிலுள்...

என்று கம்பனே வருணிக்கிறான் ராமன் இருந்த நிலை குறித்து ஒரு முக்கியமான சந்தர்ப்பத்திலே.

இப்படிப் பிராகாரங்களும் வாசல்களும் உள்ள கோயிலுக்குக் கோபுரம் யுத்த காண்டம். கோபுரத்திலே கட்டியிருக்கும் கொடி 'இரணியன் வதைப்படல'மாகிய பிரகலாத சரித்திரம். இது விபீஷணனது வெற்றிக் கொடி.

கம்பனுக்கு ராமாயணம் ராமனது விஜயப் பாட்டு என்பது மட்டுமல்ல. விபீஷணன் முதலானோரைச் சகோதரராக்கிக் கொண்டதால் சகோதர தர்மத்திற்கும் வெற்றிப் பாட்டு. ராமனது சத்திய வீரம் போல், விபீஷணனது சத்தியாக்கிரக வீரத்திற்கும் உரிய வெற்றிப் பாட்டே.



92 'கண்ணன் கடலைக் கண்ணுற்றான்'

வால்மீகி கடற் கரையையும் கடலையும் வருணித்த பின், அந்த வட கரையில் வானர சேனையை நீலன் முறைப்படி நிறுத்தியதாகவும், அப்போது இரண்டு வானர வீரர்கள் எல்லாத் திசையிலும் சுற்றிப் பார்த்த வண்ணம் அச்சேனையைப் பாதுகாத்ததாகவும் தெரிவிக்கிறார். பிறகு ராமன் தன்னுடைய சோகத்தை அருகிலிருந்த தம்பி லட்சுமணனுடன் பங்கிட்டுக் கொள்வதாகக் கூறியுள்ளார். மேலும் ஆதி கவி கூறுவதென்ன?

கண்ணனுடன் கடலைக் கண்ட முனிவர்

நாள் கழியக் கழியச் சோகம் குறையாது வளர்ந்து வருகிறது. காதலியின் வயது கழிந்து விடுகிறதே யென்பதாகவும் ராமன் லட்சுமணனை நோக்கி வருந்துகிறான்.

உடனே லட்சுமணனை மறந்து, வீசும் கடற்காற்றை நோக்கி உரையாடுகிறான். 'என் நாயகி எங்கிருக்கிறாளோ, அங்கே போய் வீசி அவளுடைய ஸ்பரிசம் பெற்று என்மேல் வீசுவாய்!' என்கிறான்.

'சீதை பார்க்கும் சந்திரனை நாமும் பார்க்கிறோமே' என்னும் அந்தப் பார்வை யுணர்வுடன், காற்றின் மூலமாக அந்த மேனியின் ஸ்பரிச உணர்வும் பெறலாமோ எனக் காதலிக்கிறது, கனாக் காண்கிறது காதலனுள்ளம்.

இந்நிலையில், அரக்கன் எடுத்துப் போனபொழுது 'ஹா, நாதா!' என்று சீதை கதறிய சத்தமும் நினைவிற்கு வருகிறது. ஏன், இன்னும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது, உட் செவியிலும் உள்ளத்திற்குள்ளும்.

'இந்தச் சத்தம் என் மனத்தில் இருந்து கொண்டு உட்கொள்ளப்பட்ட நஞ்சு போல் என் அவயவங்களை எரிக்கிறது' என்கிறான். தன் உடலை எரிக்கின்ற 'மன்மதாக்கினி' குறித்தும் பேசுகிறான்.

ஆகையால் 'லட்சுமணா, நான் உன்னை விட்டுக் கடலில் மூழ்கித் துஞ்சுகிறேன்' என்று சொல்லுகிறான். துயரமும் காதலும் கொல்லாமல் கொன்று கொண்டிருக்கும் இந்தப் பொல்லாத அவஸ்தையில், தற்கொலைப் பிரஸ்தாபமும் பொருத்தம் தான்.

இப்பேச்சின் இறுதியில், 'சீதை மிகுந்த காதலுடன் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்குவது எப்போது?' என்ற ஆசைக் கனவும் ஏற்படாமல் இல்லை. 'அழுக்கு வஸ்திரத்தை நீக்குவது போல் விரகத்தால் நேர்ந்த இக்கொடிய சோகத்தை நீக்குவது எப்போது?' என்கிறான்.

இப்படி ராமன் புலம்பும்போது சூரியாஸ்தமனம் ஆகிறது. தம்பி தேற்றத் தேறி ராமன் மாலைச் சந்தியை உபாஸிப்பதாக இந்த ஐந்தாம் ஸர்க்கம் முடிவு பெறுகிறது, ஆதிகாவியத்திலே.

அந்தக் கடற்கரையிலே ராமனை அகத்தோடு முகம் பார்த்துப் பார்த்து நமக்குக் கதை சொல்லுகிறார் வால்மீகி. சுலோகங்களின் இசையின்பமோ கடற்காற்றின் 'உயிர் உறும் அமுதம்' தான்.

கம்பன் கண்ணுற்ற கண்ணன்

'கடல் காண் படல'த்தைக் கம்பனில் காண்போம். லட்சுமணனுடன் ராமன் தன் சோகத்தையோ, விரகத்தையோ தெரிவித்ததாய்க் கம்பன் கூறவில்லை. ஆனால் சோக நினைவுகளுடன்

காதல் நினைவுகளும் காதலன்பால் பொங்கி வரக் காண்கிறான் கம்பனும்.

அத்துயர நிலையை ராமன் தானே தனிமையில் அனுபவித்ததாய்க் கூறுவது கம்பன் கூற்று, அந்தத் தனிமையைக் குலைக்க ஒருவரும் துணியவில்லை; தம்பியும் அந்நிலையில் தமையனை அணுகத் துணியவில்லை யென்பது குறிப்பு.

சேனை வெள்ளம் பொங்கி வருகிறது கடல் வெள்ளத்தை நோக்கி; வந்து கடற்கரையில் சுற்றித் தங்குகிறது. புடை பெயர்ந்து திரிந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், 'கண்ணன் கடலைக் கண்ணுற்றான்' என்பது, ராமனுடைய சோகம் நிறைந்த மனத்தின் மந்தகதிக்கு இசைந்த ஓசைப் பொலிவுள்ள விருத்தத்தில் வெளிப்படுகிறது.

'தனியும் தானும் அத்தையலுமா'க, மயங்கும் அந்தியும் முழங்கும் கடலும் எதிர் நோக்கக் கண்ணன் கண் மலர்ந்து நோக்குவதை அதோ பாருங்கள்:

பொங்கிப் பரந்த
பெருஞ்சேனை புறத்தும்
அகத்தும் புடைசுற்றச்,

சங்கிற் பொலிந்த
கையாளைப் பிரிந்த
பின்பு, தமக்கினமாம்

கொங்கிற் பொலிந்த
தாமரையின் குழுவும்
துயில்வுற் றிதழ்குவிக்கும்

கங்குற் பொழுதும்
துயிலாத கண்ணன்
கடலைக் கண்ணுற்றான்.

[புறத்தும் அகத்தும் — வெளியிலும் உள்ளுமாக. புடைசுற்ற — புடை பெயர்ந்து சுற்றித் திரிந்து கொண்டிருக்க. சங்கிற் பொலிந்த கையாளை — வளைகள் அணிந்த அழகிய கைகளையுடைய சீதையை. தமக்கு இனமாம்—தங்களுக்கு இனமாகிய. கொங்கிற் பொலிந்த — தேனோடு திகழ்கின்ற. குழுவும்—கூட்டமும். கங்குற் பொழுதும் — இராப் பொழுதிலும்.]

சீதையின் வளைகள் அணிந்த கைகளின் நினைவிலே, பாணிக்கிரகண நினைவுகள், காதல் நினைவுகள், அவளைக் கைவிட நேர்ந்த நினைவுகள் முதலான எத்தனையோ நினைவுகள் அடங்கும்-இல்லையா?

கங்குற் பொழுதும்
துயிலாத கண்ணன்
கடலைக் கண்ணுற்றான்

என்னும் வசீகர வாக்கிலே, தெற்கு மாகடலை முதன் முதல் பார்க்கும் ராமனைப் 'புறத்தும் அகத்தும்' அப்படியே பார்த்து விடுவது போன்ற ஓர் உணர்ச்சி ரஸிகர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் இதைத் தொடர்ந்து வரும் வருணனைகளில் கவிஞனின் கண்ணொளி (உள்ளொளி தான்) மங்கி விடுவது போலவும் தோன்றுகிறது.

கடலைச்சரியாகக் கண்ணுற்றானா?

அலைமேல் அலை யெறியும் கடலின் பரப்பு வருணிக்கப் படுகிறது. ஏதோ படுக்கையை உதறி விரிப்பது போலத் தோன்றுகிறதாம், காற்றினால் கடல் அலைபடும் அக்காட்சி.

திரிந்து அலுத்து வந்தவர் இளைப்பாறுவதற்காகப் பணியாளனைக் கொண்டு பாயை உதறி விரிக்கச் சொல்லுகிறோமல்லவா? காற்றாகிய பணியாளனைக் கொண்டு கடலாகிய படுக்கையை



யாரோ உதறிப் போடச் செய்வது போலத் தோன்றுகிறதாம், அலைந்து திரிந்து அலுத்து வந்திருக்கும் ராமனுக்கு முன் அலைபடுகின்ற கடல்.

கடல் திருமாலின் படுக்கையென்பதையும், அத்திருமாலின் அவதாரம் ராமன் என்பதையும் நினைவில் வைத்துக்கொண்டு இப்பாட்டைப் பாடிப் பாருங்கள் :

'சேய காலம்
பிரிந்தகலத் திரிந்தான்,
மீண்டும் சேக்கையின்பால்
மாயன் வந்தான்,
இனிவளர்வான் !' என்று
கருதி வருந்தென்றல்
தூய மலர்போல்
நுரை சிதறி முத்தும்
சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப்
படுப்பதே ஒத்த
திரையின் பரப்பம்மா !

[சேய காலம்–வெகு காலம். சேக்கையின் பால் — படுக்கையிருக்கும் இடத்தில். வளர்வான் — கண்வளர்வான். வரும் தென்றல்—வருகின்ற தென்றற் காற்றினால். தூய மலர்—வெண்ணிற மலர். புடை சுருட்டி —உட்புறம் சுருட்டி. பாயல்—பாய்; படுக்கை. படுப்பதே — விரிப்பதே. ஒத்த — ஒத்தது. திரையின் —அலைகளின்.]

பாயை உட்புறம் சுருட்டிப் பின்பு உதறி விரிப்பதுபோல் கடலை 'வரும் தென்றல்' பரப்புவதாய்க் கூறுவது ஓர் இயற்கை வருணனைதான். பேரரசரின் பாயை உதறும்போது அதிலிருந்து மலர்களும் முத்துக்களும் சிந்துவது போல், அலையாகிய படுக்கையிலிருந்து நுரைகளும் முத்துக்களும் சிந்துகின்றனவாம். என்றாலும், கவிதை, எடுத்த எடுப்பிற்கு இசைவாக அமைந்திருக்கிறதா !

மேலும் பார்ப்போம். தென்றற்காற்றானது பெரிய அலைகளிலிருந்து குறுந்திவலைகளைக் கொண்டு வந்து மழைத் துளிகளைப் போலத் தூற்றுகின்றனவாம். ஆனால் அத் திவலைகள் தீப் பொறிகளைப் போல் ராமன் தோளில் விழுந்து சுடுகின்றனவாம் :

சுழிக்கும் கொல்லன்
உல்லுலையில் துள்ளும்
பொறியிற் சுடும்அன்னே,



கொழிக்கும் கடலின்
நெடுந்திரைவாய்த் தென்றல்
தூற்றும் குறுந்திவலே!

[சுழிக்கும் - (காற்றை) வெளிப்படுத்துகிற. அன்னே - இரக்கக் குறிப்பு நெடுந் திரைவாய் - பெரிய அலைகளினின்று.]

அந்தத் தென்றலைக் கவிஞன்,

பின்னல் - திரைமேல்
தவழ்கின்ற பிள்ளைத்
தென்றல்

[பின்னல் திரை - ஒன்ருெடொன்று பின்னிக் கொண்டு வருவது போலத் தோன்றுகிற அலைகள்.]

என்று வருணிப்பதும் இயற்கைக்குப் பொருத்தமாகவே யிருக்கிறது. எனினும் உள்ளொளி—கவிதைக் கண்ணொளி—சரியாகப் பார்க்கவில்லை யென்று தான் சொல்ல வேண்டும்.

சோகத்தாலும் தாபத்தாலும் இளைத்திருக்கும் ராமனை,

நென்னல் கண்ட
திருமேனி இன்று
பிறிதாய் நிலைதளர்வான்

[நென்னல் – நேற்று. பிறிதாய் நிலை தளர்வான் - இது வேருேர் உடம்பு என்று சொல்லும்படி மிகவும் இளைத்திருக்கும் ராமன்,]

என்று கூறுவதும் பொருத்தமாயிருக்கிறது.

இப்படி மெலிகின்ற நிலையிலும் - நெடியோனின் மெலிவல்லவா!— அந்த அழகு வாய்ந்த வீரத் தோளை,

சிலைமேல் கொண்ட
திருநெடுந்தோள்

[சிலை - வில்,]

என்று அந்தக் கோதண்டம் தாங்கிய அழகுடன் காட்டுவதும் அழகா யிருக்கிறது. எனினும் கடலையோ, கண்ணனையோ கவிதைக் கண் சரியாகக் கண்ணுற்றுக் காட்டவில்லை.

சீதைக்கும் ராமனுக்கும் இடையே இப்போது இந்தக் கடல் ஒன்றுதானே குறுக்கிடுகிறது. இந்த நிலையில்,

'தூரம் இல்லை
மயில்இருந்த சூழல்'
என்று மனம்செல்ல,
வீர வில்லின்
நெடுமானம் வெல்ல—

[மயில்—(இங்கே) சீதை. வீர வில்லின் நெடுமானம்—வீர வில்லினுல் பாதுகாக்கக்கூடிய சிறந்த மானம். வெல்ல—அந்த மனத்தை வென்று தடுக்கவும்,]

என்று கூறுவதும் ரஸமா யிருக்கிறது. ஆனுல் அந்த 'மயிலை'ப் பார்ப்பது போலத் தான் எதிரேயுள்ள கடலையும் பார்க்கிருன் ராமன்!

ராமனுடைய இந்தச் சோக நிலையில் கண்ணீரே கடலாகி விட்டது போலத் தோன்றுவதும் இயல்புதான், கடலும் கண்ணீர் வடிப்பது போலத் தோன்றுகிறது சீதைக்காக! ஆனுல் வார்த்தைக் குவியலில் கண்ணீரும் கடலும் வற்றி வறண்டு போகின்றனவே:

சிந்துகின்ற
நறுந்தரளக் கண்ணீர்
ததும்பித் திரைத்தெழுந்து

வந்து, வள்ளல்
மலர்த்தாளின் வீழ்வ(து)
ஏய்க்கும் மணியாழி.

[நறுந்தரளக் கண்ணீர்-சிறந்த முத்துக்களாகிய கண்ணீர். திரைத்து- அலைபட்டு, வள்ளல் - (இங்கே) ராமன். வீழ்வது ஏய்க்கும்-விழுந்து வேண்டுவதை ஒத்திருக்கும். மணி ஆழி-அழகிய சமுத்திரம்.]


பாடல்களின் சிற்சில பகுதிகளில் அழகு காணப்பட்ட போதிலும், பொதுவாக இப்படலத்திலுள்ள பாடல்கள் கம்பனுடைய யுத்த காண்ட முகப்பிற்குரிய கம்ப சித்திரமாக அமையவில்லை யென்பது வெளிப்படை. இதனுல் இப்பாடல்களைக் கம்பன் வாக்கு அல்ல என்று துணிவது சரியன்று.

சீதை துயரையும் இமையோர்குறையையும் போக்க ராமன் வருவதால் அவனைக் கடல் ஓடி வந்து மகிழ்ச்சி—ஆரவாரங்களுடன் வரவேற்பதாக முடிவுறுகின்றது கடல் வருணனைப் பகுதி. (எப்படியாவது முடிவுறுகின்றதே என்று நாமும் மகிழ்ச்சி கொள்ள வேண்டியது தான்!)

கங்கைத் திரு நா
டுடையானைக் கண்டு
நெஞ்சம் களிகூர,

அங்கைத் திரள்கள்
எடுத்தோடி ஆர்ப்ப
தேய்க்கும் மணியாழி.

[அங்கைத் திரள்கள் - அழகிய கை வரிசைகள். ஏய்க்கும் - ஒத்திருக்கும்.]



93. கவிஞன் சோர்வு

கடலை வருணிக்கும் கம்பீர அழகு வாய்ந்த பாடல்கள் உலக இலக்கியத்தில் உண்டு. ஒரு சாதாரண உதாரணமாக, ஆங்கிலக் கவியான பைரனுடைய சில கடல் வருணனைப் பாடல்களைக் குறிப்பிடலாம். இத்தகைய பாடல்களுடன் ஒப்பிடத்தக்க சிறப்பு ஒன்றும் கம்பனது 'கடல் காண் படல'த்தில் காணப்படவில்லை யென்பது உண்மைதான்.

'படிப்போர் எதிர்பார்க்கக் கூடியபடி இங்கும்' ''வருணனை வழிவேண்டு படல''த்திலும் (இது யுத்த காண்டத்தின் ஆறாவது படலம்) கடல் வர்ணனை மூன்றாம் தரத்ததாகத்தா னிருக்கிறது. பைரனுடைய கம்பீரமான சமுத்திர வர்ணனையை நினைவுறுத்தக் கூடிய, ரஸிகர் காதில் அடிக்கொரு முறை அவர்கள் விரும்பாமலிருக்கையிலும் கூடத் தொனித்துக் கொண்டிருக்கக் கூடிய, செய்யுள் ஒன்றேனும் இப்படலங்களில் இல்லை' என்று ஆழ்ந்தகன்ற நுண்ணறிவாளர் வ. வெ. சு. ஐயர் கூறியுள்ளார்.

கடற்கரையில் எழுபது வெள்ளம் சேனை தங்குவதாய்த் தொடங்குகின்ற முதலாவது பாட்டிலும் கடல் காணப்படவில்லை. கண்ணன் கடலைக் கண்ணுற்றதாக வரும் அடுத்த பாட்டிலே, துயிலாத கண்களையும், அக் கண்களிலும் கருத்திலுமுள்ள நெடுஞ் சோர்வையும் சோகத்தையுமே காண்கிறோம். ஆனால் அந்தக் கண்ணனுக்கும் 'சைத்தியோபசாரம்' செய்ய முயலும் அந்தக் கடல் எங்கே!

கடற்கரையிலே சிதறும் குறுந் திவலைகளை வருணிக்கும் செய்யுளிலும் அந்தத் திவலைகளை வாரிச் சிதறும் 'நெடுந் திரை'களையோ, 'கொழிக்கும் கட'லையோ காணவில்லை.

ஐந்தாம் பாட்டிலே, 'பின்னல் – திரைமேல் தவழ்கின்ற பிள்ளைத் தென்றல்' என்ற அழகான சொற்றொடர் வருகிறது. ஆனால் பின்னிப் பிணைந்து வரும் அந்த அலைகளைப் பார்க்க முடியவில்லையே! 'தவழ்கின்ற பிள்ளைத் தென்ற'லையும் அணைந்து அனுபவிக்க இயலவில்லையே! 'தனியே கதறும் தடங்கடல்' – ஒரு நல்ல சொற்றொடர் தான்; ஆனால் அந்தக் கதறல் காதில் விழவில்லையே!

கடற்கரையில் கொடிப் பவளமும் முத்தும் சீதையை நினைவூட்டுகின்றனவாம்; பிரிவுத் துயரை மிகுவிக்கின்றனவாம். எனினும் 'பவள'ப் பாட்டையாவது, 'முத்து'ப் பாட்டையாவது கடல் வருணனைப் பாட்டென்று கௌரவிக்க இயலவில்லை.

முத்துக்கள் சீதையின் முறுவலை நினைவூட்டுகின்றனவாம்.

ஈரம் இல்லா
நிருதரோ(டு) என்ன
உறவுண்(டு) உனக்(கு)? ஏழை
மூரல் முறுவல்—
குறிகாட்டி, முத்தே!
உயிரை முடிப்பாயோ?

[நிருதரோடு – அரக்கரோடு. ஏழை– (இங்கே) சீதை. மூரல் முறுவல் – பல்லொளி வெளித் தெரிகிற புன்சிரிப்பு. குறி – நிலை.]

என்று ராமனுக்காக இரங்கி முத்தைக் கேட்பது போல் அமைந்திருக்கிறது இச் செய்யுட் பகுதி.

'முத்துக்கள் சீதையின் முறுவல்போல் தோன்றி, இராம பிரானுக்கு வருத்தத்தை விளைவிப்பதைக் கருதிய கம்பர், தாம் பிற்காலத்து இராம பிரானது சரித்திரத்தைக் கூற வந்த கவி யென்பதை

யும் மறந்து, நேரே சரித்திரம் அப்போது தான் நடப்பது போன்ற பாவனையைப் பெற்று, "முத்தே! நீ இங்ஙனம் சீதையின் மூரல் முறுவலைக் காட்டி இராம பிரானது உயிரைக் கவரக் கடவையோ? உனக்கு அரக்கரோடு ஏதேனும் உறவு உண்டோ!" என்று வினவுகின்றனரென்க' என்பது ஒரு பிரபல உரையாசிரியரின் வியாக்கியானம்.

ஆனால் கவிஞன் 'நேரே சரித்திரம் அப்போது தான் நடப்பது போன்ற பாவனையைப் பெற்'றிருந்ததாக இச் செய்யுளுருவம் சான்று தரவில்லையே! தன்னை மறந்த லயத்திலும் கவிதா சமாதியிலும் தானே மேலே குறித்த 'பாவனை'யைக் கவிஞன் பெற்றிருக்க முடியும்? அதற்குச் செய்யுளின் மந்திர ஓசை ('ரிதம்') சான்று தரவில்லை.

இனி, முத்தையும் பவளத்தையும் மறந்து 'மறுபடியும் கடலின் வருணனை வருகின்றதே, அதிலாவது கடல் வருகிறதா மனக் கண் முன்பு?' என்று பார்க்கலாம்.

சிந்து கின்ற
நறுந்தரளக் கண்ணீர்
ததும்பித் திரைத்தெழுந்து

[நறுந்தரளக் கண்ணீர் — சிறந்த முத்துக்களாகிய கண்ணீர்.]
என்ற வருணனையும் சில அழகிய சொற்களின் ஒரு வியர்த்தமான குவியல் தான்.

முறுவல் காட்ட முயன்று படுதோல்வியடைந்த முத்து, இப்போது கடலின் கண்ணீரைக் காட்ட முயன்று மீண்டும் தோல்வியடைகிறது. அடுத்த பாட்டிலே, கடலைச் சந்தனம் அரைப்பவனாக உருவகம் செய்து, மடங்கித் தோன்றும் கடல் நீரை அரைக்கும் குழவியாகவும், கடல் இருக்கும் தரையை அம்மிக் கல்லாகவும், மெல்லிய நீரைத் தெளி நீராகவும், நுரையை வெண் சந்தனமாகவும், அலையைக் கையாகவும் விவரமாய் வருணித்திருப்பதும் வியர்த்த வருணனை தான்.

கடலின் இறுதி வருணனைப் பாட்டிலும் ஓர் இறுதி-முயற்சி செய்து தோல்வியுறுகின்றது கற்பனைத் திறன்:

கொங்கைக் குயிலைத்
துயர் நீக்கி இமையோர்க்(கு)
உற்ற குறைமுற்ற,

வெங்கைச் சிலையன்
தூணியினன், விடாத
முனிவின் மேற்செல்லும்




கங்கைத் திருநா(டு)
உடையானைக் கண்டு
நெஞ்சம் களிகூர

அங்கைத் திரள்கள்
எடுத்தோடி ஆர்ப்ப(து)
ஏய்க்கும் அணியாழி.

[கொங்கைக் குயில் – சீதை. இமையோர்க்கு–தேவர்களுக்கு. உற்ற–நேர்ந்துள்ள. குறை முற்ற–குறையை ஒழிக்க. வெங்கை – விரும்பத் தக்க கை. சிலை – வில். தூணியினன் – முதுகில் அம்பறாத் தூணியைக் கட்டியவன். விடாத முனிவின் – நீங்காத சீற்றத்துடன். மேற்செல்லும் – எதிரிமேல் படையெடுத்துச் செல்லுகிற. கங்கைத் திரு நாடுடையானை – ராமனை. அங்கைத் திரள்கள் – அழகிய கை வரிசைகள். ஆர்ப்பது ஏய்க்கும் – ஆரவாரஞ் செய்வதை ஒத்திருக்கும்.]

பாட்டு ஓரளவு இசையின்ப முள்ளது தான். ஆனால் அலைக் கைகளைத் தூக்கிக் கடல் செய்து வருகின்ற ஆரவாரத்தையோ, ஆர்ப்பாட்டத்தையோ பாட்டில் கேட்க முடியவில்லை. ஏதோ சப்த ஜாலம் இருக்கிறது; ஆனால் அது ஓர் 'இந்திர ஜாலம்' செய்து சமுத்திரத்தை மனக் கண்ணுக்கோ, உட்செவிக்கோ இலக்காக்கும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை.

விமர்சன நுண்ணறிவாளர் வ. வெ. சு. ஐயர் எழுதுகிறார்: 'கடல் காண் படலத்திலுள்ள பன்னிரண்டு செய்யுட்களும் கேவலம் வார்த்தைகளால், வியர்த்த வார்த்தைகளால் நிரம்பி யிருக்கின்றன. அவைகளிலுள்ள உத்பிரேட்சைகள்



சமுத்திரத்தின் கோஷத்தையோ, பூரிப்பையோ, அலை வீக்கத்தையோ பிரதிபிம்பிக்கும் ஆற்றல் அற்றனவா யிருக்கின்றன. வருணனையின்முடிவில் கவி, " இலங்கைப்—பின்னதாய காரியமும் நிகழ்ந்த பொருளும் பேசுவாம்" என்னும்போது, நல்ல வேளையாய் இவ்வளவோடு நிறுத்தினுனே என்ற எண்ணமே உண்டாகிறது.

யுத்த காண்டத்தின் 'கடவுள் வாழ்த்து'ச் செய்யுளையும் சேர்த்துத் தான் பன்னிரண்டு பாடல்கள் என்று ஐயர் கணக்கிட்டிருக்கிறுர்.

ஆனல் 'கடவுள் வாழ்த்து' யுத்த காண்டத்திற்கு மிகவும் பொருத்தமான ஓர் அற்புதச் செய்யுள் என்பதை ஏற்கெனவே கண்டோம். அடுத்த படலத்திற்கு, அதாவது, ராவணனது மந்திராலோசனையை வருணிக்கும் படலத்திற்குத் தோற்றுவாயாக அமைந்திருக்கும் இப் படலத்தின் இறுதிப் பாட்டும் பொருத்தமாக நன்ருக அமைந்திருக்கிறது என்பது என் கருத்து :

இன்ன தாய
கருங்கடலை
எய்தி
இதனுக்கெழு
மடங்கு

தன்ன தாய
நெடுமானம்
துயரம்
காதல் இவை
தழைப்ப,

'என்ன தாகும்
மேல்விளைவு?' என் றிருந்தான்
இராமன்; இகல் இலங்கைப்
பின்ன தாய
காரியமும் நிகழ்ந்த
பொருளும் பேசுவாம்.

[இன்னதாய—இப்படிப்பட்ட. இகல் — வலிமை; பகைமை.]

கடலைக் கண்ட ராமனுக்கு அக் கடலைக் காட்டிலும் ஏழு மடங்கு மானமும் துயரமும் காதலும் அலையலையாகப் பொங்கி வெள்ளமிடுகின்றன என்று கூறுவதில், கம்பனது கவித் திறனுக்கே ஒரு திறவுகோல் கிடைத்துவிட்டது போல் தோன்றுகிறது. இயற்கையைக் காட்டிலும் சித்தக் கடலையும், இக் கடலின் சிற்றலை-பேரலை முழக்கங்களையும் வெளியிடுவது தானே கம்பன் கவிதையின் சிறப்பியல்பு?

'கடல் காண் படல'த்திலே 'பொங்கிப் பரந்த' என்று தொடங்கும் இரண்டாவது பாட்டிலும் மந்திர சக்தி வாய்ந்த 'ரிதும்' இருக்கிறது. இது 'பொங்கிப் பரந்த' கடலை 'இதோ பார், பார்' என்று காட்ட இயலவில்லை யெனினும், கண்ணுறங்காத கண்ணனது சித்தக் கடலைக் காட்டி விடுகிறது, இறுதிப் பாட்டைப்போல. இங்கே சோர்ந்து காணும் சித்தக் கடல் இலங்கையை நோக்கிப் பொங்கி யெழுவதை இறுதிப் பாட்டில் பார்க்கிறோம்.

இது நிற்க. அடுத்த படலத்தின் நிலையையும் ஒருவாறு தெரிந்து கொள்வோம். இதில் ராவணன் மந்திரிமார் முதலான அரக்கர்களுடன் மந்திராலோசனை செய்வது கூறப்படுகிறது.

இப்பகுதியில், 'மில்டனது ஸ்வர்க்க நஷ்ட காவியத்தின் இரண்டாம் புத்தகத்தில் காணும் மந்திரவர்ணனையின் ஒழுங்கும் திருப்தி உணர்ச்சியும் இல்லை' யென்பர் வ. வெ. சு. ஐயர். எனினும், 'கடல் காண்படல'த்திலே எக்காரணத்தாலோ கவி யுள்ளத்தில் ஏற்பட்டிருந்த சோர்வு ஒருவாறு 'இராவணன் மந்திரப் படலத்' தொடக்கத்திலேயே நீங்கி விடுவதாகத்தான் எனக்குப் புலனாகிறது.

அயோத்தியா காண்டத் தொடக்கத்திலே தசரத சக்கரவர்த்தி ராமனுக்கு விரைவில் முடிசூட்ட வேண்டு மென்ற நோக்கத்துடன் மந்திராலோசனை நடத்துகிறான். யுத்தகாண்டத்தின் தொடக்கத்திலே, அனுமனால் எரியுண்ட இலங்கையைத் தெய்வத் தச்சன் புதுப்பித்தது கண்டு மகிழ்ந்த ராவணன், ஆலோசனை-மண்டபத்தில் வந்து வீற்றிருந்து தன் வீரம் பழியுண்டதற்கு வருந்தி மந்திராலோசனை நடத்துகிறான்.

தசரத சக்கரவர்த்தியின் மந்திராலோசனை-மண்டபத்திலே, வசிஷ்டமுனிவரும் சுமந்திரனும் மந்திரக் கிழவர்களின் பிரதிநிதிகளாக நின்று ராம பட்டாபிஷேகத்திற்கு அனுமதி கொடுக்கிறார்கள். இந்த மந்திராலோசனை மண்டபத்திலோ ராணுவ வெறியர் பலர் ராவணனுடைய அதர்ம ஆவேசத்தைக் கிளப்பி விடுகிறார்கள். சொந்த வெறியும், பிறர் தந்த வெறியும், விபீஷணனது அறவுரைக்கும் அறிவுரைக்கும் இடமில்லாமல் ராவணனது நெஞ்சை நிரப்பி விடுகின்றன. கருத்தொருமித்த அனுமதி கிடைத்து விடுகிறது தசரதனுக்கு. ராவணனுடைய மந்திராலோசனையோ ஒன்றுபட்ட முடிவு காண வில்லை.

'பருவ மழை பொழிவதையும் வேண்டாம் என்று மறுப்பவரும் உண்டா?' என்ற விதமாய்க் குலகுரு சம்மதம் கிடைத்ததும், எல்லாம் செவ்வையாக முடிந்து ராமபட்டாபிஷேகம் நிச்சயித்தபடியே இனிது நிறைவேறும் என்றே வாசிப்பவர்களுக்குத் தோன்றியதல்லவா அந்த மந்திராலோசனையில்? ஆனால் பருவ மழையையும் வேண்டாமென்று தடுத்து விட்டது கூனியின் கோணலுள்ளம். ஏன்?

‘இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை’யின் வடிவம்தான் கூனி — உள்ளக் கூனலும், உடற்கூனலும் ஒருங்கே வாய்ந்த கூனி என்பது கம்பனது கவிச் சிற்பத் திறன் பொதிந்த கூற்று. மூவுலகத்திற்கும் இடுக்கண் மூட்டப் போகிற கூனி, மூவுலகத்திற்கும் இன்னல் செய்து லோக ராவணனாயிருப்பவனின் — உலகத்தையெல்லாம் அழச் செய்து எல்லாரையும் இடுங்கு கண்ணராக்கியவளின் — தீமைக்கு ஒரு வடிவம் என்ற கவிக்கூற்று நம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.


சீதையைச் சிறைவைத்த தீமை ஒன்றே ராவணனுக்குரியது என்று சிலர் சருதுகிறார்கள்; சொற்பொழிவாற்றுகிறார்கள். அண்மையில் காரைக்குடியில் நடைபெற்ற கம்பன் மகாநாட்டிலே எனது இலக்கிய நண்பர்களிலும் சிலர் மேலே சொன்னபடி உரையாடினார்கள். ஆனால் இந்த வாதம் கம்ப ராமாயணத்திற்குச் சற்றும் பொருந்துவதன்று. குற்றங்களுக்கெல்லாம் சிகரம் கற்பின் சிகர ஜோதியாகிய பிராட்டியைச் சிறைவைத்தது என்பதே கம்பன் கதை.

இத்தகைய ராவணேச்வரனது வீழ்ச்சி, அயோத்தியா காண்டத்தில் அந்த மந்திராலோசனையிலேயே சூட்சுமமாகத் தொடங்கி விடுகிறது. தசரதன் மந்திராலோசனை செய்கிறான், பேர்பெற்ற மந்திரிகளுடனும் மகா ஞானியான வசிஷ்ட முனிவருடனும். கூனி சதியாலோசனை செய்கிறாள் கைகேயியுடன். சதியாலோசனை மந்திராலோசனையை வென்று விடுகிறது. எப்படி!

திரை மறைவில் விதி ஒரு மந்திராலோசனை நடத்துகிறது. அரக்கர் பாவம், அல்லாதார் இயற்றிய அறம் முதலான மந்திரிமாருடன் விதியரசு ஆலோசித்துப் பார்க்கிறது. விதியின் மந்திராலோசனைக்கும் ஒரு ‘வசிஷ்டர்’ கிடைக்கிறார். முனிவர்களின் அருந்தவமே தான் இந்த வசிஷ்டர்!

விதியின் திரை மறைவு – மந்திராலோசனை கூனியின் சதியாலோசனைக்குத் துணை புரியவே, தசரத சக்கரவர்த்தியின் மந்திராலோசனையும் ராட்சஸ சக்கரவர்த்தியின் மந்திராலோசனையும் ஒருங்கே தோல்வியுறுகின்றன.

அந்த மந்திராலோசனையின் தோல்வி, இந்த மந்திராலோசனையின் தோல்விக்கும், மூன்று லோகங்களையும் ஹிம்சித்து வந்த ராவண வதத்திற்கும் காரணமாகிறது; மூன்று லோகங்களின் க்ஷேமத்திற்கும் வித்தாகிறது.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

94. ஆலோசனை – மறவர்கள்

தென் கடலின் வடகரையில் ராமன் தம்பியோடும் வானர வீரர்களோடும் தங்கி யிருக்கும்போது, தென் கரையில் ராவணனுடைய மந்திராலோசனை நடைபெறுகின்றது. லட்சுமணன் தேற்றத் தேறி, மாலைச் சந்தியை உபாஸிக்குமாறு ராமனை விட்டு விட்டு, அரக்கர்கோன் அரக்கரைக் கூட்டி ஆலோசனை கேட்ட வரலாற்றைச் சொல்லத் தொடங்குகிறார் வால்மீகி முனிவர்.

கம்பனோ,

'என்ன தாகும்
மேல் விளைவு ?' என்(று)இருந்
தான்
இராமன்

என்ற நிலையில் கருங்கடலை 'எழுதரிய திருமேனிக் கருங்கடல்' எதிர் நோக்குவதாக விட்டு விட்டு, 'விரிந்திடு தீவினை'யின் அறிகுறியான ராவணேசுவரன் மந்திரிமார் முதலானோரோடு மந்திராலோசனை செய்யும் அடுத்த படலத்திற்கு வருகிறான்.

வால்மீகியும் மந்திராலோசனையும்

அனுமன் இலங்கையில் செய்த கொடுஞ் செயல்களைப் பார்த்ததும் வணங்கா முடித் தலையும் வெட்கத்தால் சிறிது தாழ்ந்ததென்று முனிவர் தொடங்குவதில், கண்டு காட்டுவது போல் கதை சொல்லும் திறன் வெளிப்படுகிறது.

இப்படித் தலை தாழ்ந்து அரக்கர்களை நோக்கி, 'வானரன் ஒருவன் இலங்கை முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டானே! இனி ராமனை வெல்வதைப் பற்றி ஆலோசிக்க விரும்புகிறேன்' என்கிறான். இப்படி அரக்கரிடம் ஆலோசனை கேட்பதே ஒரு சொற்பொழிவு போல் அமைந்து, ஆறும் ஸர்க்கத்தை நிரப்பி விடுகிறது.

அரக்கர்கள் ராவணனைப் புகழ்ந்து தைரியம் சொல்லுதல் அடுத்த ஸர்க்கத்தில் விவரிக்கப் படுகிறது. அரக்கர்கள் ராவணனைப் புகழ்கிறார்கள்; பழைய வெற்றிகளை நினைவூட்டுகிறார்கள், இந்திரஜித்து இந்திரனைப் பிடித்து இலங்கைக்குக் கொண்டு வந்ததையும் நினைவூட்டுகிறார்கள். இந்திரஜித்து ஒருவனே எல்லா வானரசேனைகளோடும் எதிரியை நிச்சயமாக வென்று விடுவான் என்று உறுதி கூறுகிறார்கள்.

இதற்கு அடுத்த எட்டாம் ஸர்க்கத்திலே ராட்சஸ சேனாபதியான பிரகஸ்தன் முதலியோர் தம் வல்லமை கூறுகிறார்கள். 'வானர வம்சத்தை நான் ஒருவனே அழித்து விடுவேன்' என்கிறான் பிரகஸ்தன். எனினும் ராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது குற்றம் என்கிறான். அக் குற்றத்தால் ராவணனுக்கு ஒரு துன்பமும் நேராதவாறு தானே பாதுகாக்கக் கூடும் என்றும் தெரிவிக்கிறான்.

துர்முகன் என்ற அரக்கனும் தானே வானரங்களையெல்லாம் வதைத்து விடக் கூடும் என்கிறான். பின்னர் வஜ்ரதம்ஷ்ட்ரன் பேசுகிறான். (இந்த அரக்கன் பெயரில் மூன்று மெய்யெழுத்துக்கள் முனைந்து சற்றுக் கோரமாய்க் குறுக்கிட்டு ஈரத் தமிழ் நாவைக் கொஞ்சம் பரீட்சிக்கத்தான் செய்கின்றன!)

இந்த முரடன் இரத்தமும் தசையும் பற்றியிருந்த கதாயுதம் ஒன்றைச் சுழற்றிக்கொண்டு பேசுகிறான். பிரிட்டிஷ் சேனாபதி ஒருவன் அமைச்சருடன் பேசும்

போது ஒரு கூர்மையான வாளை உருவிச் சுழற்றிக்கொண்டு, 'நான் அப்படிச் செய்து விடுவேன், இப்படிச் செய்து விடுவேன்' என்று சபதம் செய்தது ஒரு வரலாற்றுச் செய்தி. இதற்கும் வால்மீகியின் இதிகாசச் செய்திக்குமுள்ள தொடர்பைப் பார்த்தீர்களா! ராணுவ பலம் ஸாராம்சத்தில் ராட்சஸ பலம் தானே!

தசையும் உதிரமும் பற்றி யிருந்த கதாயுதத்தை — யாரோ எதிரி ஒருவனைச் சற்று முன்பு தான் அறைந்து கொன்ற அம்முரட்டுக் கருவியை—அப்படியே கழுவாமல் எடுத்துச் சுழற்றினன் என்பது, ராட்சஸ பயங்கரம் சொட்டச் சொட்ட வருகின்ற வருணனை. 'வஜ்ர தம்ஷ்ட்ரன்' என்ற பெயரே இத்தசைய பயங்கரமான கொடுமைக்கு வாசகமாக அமைந்திருப்பதும் பொருத்தம் தான்.



இக் கொடியவன். சுக்ரீவனுடனும் லட்சுமணனுடனும் ராமனையே கொன்று தீர்த்து விடுவதாகச் சொல்லுகிறான். என்றாலும் இவன் 'மிருக' பலத்தை மட்டும் நம்பாமல் ராமனை வஞ்சித்துக்கொல்லவேண்டுமென்றும் ஆலோசனை சொல்லுகிறான்.


ராமனுக்குத் தான் மனித சேனை இல்லையே: வானர சேனை தானே. 'அவனுக்கு நாம் மனித சேனையும் கொடுப்போம்' என்பது இந்த அரக்கனின் யுத்த தந்திரம். எப்படி!

ஆயிரக்கணக்கான அரக்கர்கள் மனித வேடம் பூண்டு ராமன் முன்பாகப் போய் நிற்க வேண்டுமாம். 'இவர்கள் திடுதிமென்று எப்படி எங்கிருந்து வந்து விட்டார்கள்?' என்று ஐயப்பாடு ஏற்படாதா? 'நாங்கள் தங்கள் தம்பி பரதரால் அனுப்பப்பட்டவர்கள்?' என்று கூசாமல். குழப்பம் இல்லாமல் சொல்லிக்கொள்ள வேண்டுமாம். அவர்களையும் சேர்த்துக்கொண்டு ராமன் இலங்கைக்கு வருவானும். அதற்குள் இங்குள்ள அரக்கர்களும் விரைந்து எதிர்கொண்டு போக வேண்டுமாம். இந்த ராட்சஸ மூளை எப்படி!

இதே எட்டாம் ஸர்க்கத்தில் கும்பகர்ணனுடைய புதல்வனையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் முனிவர் பெருமான். கும்பகர்ணன் மகன் நிகும்பன். பெயர்ப் பொருத்தத்திலேயே உறவும் தொனிக்கிறதல்லவா! இவனும் ஒருவனாகவே எதிரிகள் அனைவரையும் வதைக்கக் கூடுமென்று வாதாடுகிறான்.

உடனே ஒரு மலை கிளம்புவது போலக் கிளம்புகிறான் வஜ்ரஹநு என்ற அரக்

படுத்திக் கொள்ளலாம் என்ற இந்த ஆலோசனை எப்படி! மதுவிலக்கை விலக்கித் தானாக வேண்டும் என்று இன்றும் குதிபோடுகிறவர்கள், பதி போடுகிறவர்கள் எல்லாரும் ஆலோசிக்க வேண்டிய விஷயம்.



கன், நாக்கை வெளியே நீட்டிக்கொண்டு. 'நான் ஒருவனாகவே வானரர்களைப் பட்சித்து விடுகிறேன். நீங்கள் கவலையற்று......' என்று பேசத் தொடங்குகிறான் இந்த நீண்ட நாவன், பெரும் பசயன்.

இப்படி நினைவூட்டியதும் பசியை மறந்திருக்க முடியுமா மற்றையோரால்! எனவே 'மதுபானம் செய்து கொண்டு விளையாடிப் பொழுது போக்குங்கள்' என்கிறான், அவர்களை நோக்கி.

பசியென்ற யம பாசத்தையும் சற்று மறந்திருக்கக் குடி வெறியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்...

கும்பனுடைய போர் வெறி கண்டும் நிகும்பனால் சும்மா இருக்க முடியுமா? நிகும்பன் முதலானோர் தடி, ஈட்டி, கத்தி, சூலம், கோடரி, அரிவாள் முதலான கருவிகளுடன் வெளிக்கிளம்பி, ராம லட்சுமணருடன் இலங்கையைச் சொளுத்திய 'அற்ப'னையும் அதம் செய்து விடப் புறப்படுகிறார்கள். இப்படித் தொடங்குகிறது ஒன்பதாம் ஸர்க்கம்.

இதே ஸர்க்கத்தில் தோன்றுகிறான் விபீஷணனும். ஆயுதபாணிகளாய்ப் புறப்பட்ட அரக்கர்களைத் தடுத்து உட்

காரச் செய்து, அவர்களுக்கு எதிரே கைகூப்பிய வண்ணம் விபீஷணன் சீதா தேவியைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமென்கிறான். தருமத்தையும் சுகத்தையும் ஒருங்கே நாசம் செய்யும் கோபத்தை விட்டுவிடச் சொல்லுகிறான். மனத்தெளிவுடன் நீதி நெறியைப் பற்றி வாழ்வோம் என்கிறான்.

இந்த நிலையில் ராவணன் இந்த ஆலோசனையை இப்படியே நிறுத்தி விட்டு அரண்மனை புகுந்ததாக ஒன்பதாம் ஸர்க்கம் கூறி முடிக்கிறது. பத்தாம் ஸர்க்கத்திலும் விபீஷணன் தமையனது மாளிகையில் புகுந்து சீதையை விட்டுவிட வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்துகிறான்.

இந்த ஸர்க்கத்தின் முற்பகுதியில் அரண்மனை வருணிக்கப்படுகிறது. இந்த அரண்மனையில் 'வேதங்களை நன்றாக உணர்ந்த பிராமணர்கள், ராவணனுக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு மங்களகரமான புண்யாஹங்களை ஓதிக் கொண்டிருந்ததாக வால்மீகி மாமுனிவர் கூறி, அதை விபீஷணனும் கேட்டதாக ஒரு சாட்சியும் காட்டுகிறார். இது ராமாயணத்தில் ஆரிய திராவிட ஆராய்ச்சிகள் செய்யும் கலை வீரர்களின் கவனத்திற்கு உரியது.

விபீஷணன் அரண்மனைக்குள்ளே போய் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ராவணனை வணங்கி நிற்பதும், பிறகு அண்ணன் கண்ணால் காட்டிய வேறொரு ஆசனத்தில் தம்பி மரியாதையாக அமர்வதும் விவரமாய்க் கதை சொல்லும் கலைத்திறனுக்குச் சான்றுகள்.

முதலில் மரியாதைகளாலும், நல்ல இனிமையான வார்த்தைகளாலும் மகிழ்வித்தபின் சீதையை விட்டுவிட வேண்டுமென்ற அறிவுரையை மீண்டும் விபீஷணன் ராவணன் காதில் போடுவது வால்மீகியின் மனோதத்துவ ஞானத்திற்குச் சான்று. ராவணனோ பிடிவாதமாய் மறுத்து, விபீஷணனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிடுகிறான். இப்படிப் பத்தாம் ஸர்க்கம் முற்றுப் பெறுகின்றது, ஆதி காவியத்திலே.

உத்தியோக தோரணையில் ஆலோசனை

இனிமேல் தான் ராவணன் அமைச்சர்களுடனும் நண்பர்களுடனும் மந்திராலோசனைக்காகச் சபையில் பிரவேசிக்கிறானென்று அடுத்த ஸர்க்கம் தெரிவிக்கிறது. எனவே இதுவரை நடந்த ஆலோசனைகள் உத்தியோக தோரணையில் ஒழுங்கு முறையில் சபா மண்டபத்திலே நடைபெறவில்லை யென்றுதான் கருத வேண்டும்.

இந்த ஸர்க்கத்திலே ராவணன் இரதத்தில் படை வீரர்கள் புடைசூழ வாத்திய கோஷங்களுடன் சபையை நோக்கி வருவது வருணிக்கப் படுகிறது. அரக்கர்கள் தலை வணங்கி வாழ்த்தித் தோத்திரம் செய்யச் சக்கரவர்த்தி சபா மண்டபத்தை அடைகிறான்.

இம் மண்டபம் பிசாசுகளால் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப் படுவதாகவும், விசுவகர்மாவினால் அமைக்கப் பெற்றிருப்பதாகவும் வால்மீகி தெரிவிக்கிறார். ராவணன் வீற்றிருக்கும் ஆசனமும் வருணிக்கப் படுகிறது.

பிறகு ராவணன் தூதர்களை ஏவி மந்திராலோசனைக்கு உரியவர்களை அழைத்துவரச் செய்கிறான். அரக்கர்கள் சிவிகை, இரதம், குதிரை, யானை முதலிய வாகனங்களில் வந்து, சிங்கங்கள்

மலைக் குகையில் புகுவதுபோல் மண்டபத்தில் பிரவேசிக்கிறார்கள்.

காலில் விழுந்து சக்கரவர்த்தியை வணங்கியபின் பீடங்களிலும் வேறு ஆசனங்களிலும் தரையிலும் உட்காருகிறார்கள். இவர்களிடையே மந்திரிமாரும் சூரர்களும் நண்பர்களும் ஆராய்ச்சித் திறனுள்ள பண்டிதர்களும் காணப்படுகிறார்கள்.

இந்த அரக்கர்கள் அழகான ஆடையாபரணங்களாலும் பூமாலைகளாலும் தங்களை அலங்கரித்துக் கொண்டு, பூசிய கலவைச் சந்தனம் கமகமவென்று பரிமளிக்க, வந்து வீற்றிருப்பதும், இவர்களெல்லோரும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளாமல் எஜமானன் முகத்தையே பார்த்திருப்பதும், அவனும் அவர்களை நன்றாக உற்றுப் பார்ப்பதும் வால்மீகியின் 'உள்ளது உள்ளபடி' வருணிக்கும் உரிமைத் திறனைப் புலப்படுத்துகின்றன.

ராவணன் கட்டளைப்படி பிரகஸ்தன் என்ற சேனாபதி ஆலோசனைச் சபையின் உள்ளும் புறமும் படை வீரர்களை வைத்து நகர்க் காவலையும் அகத்தும் புறத்தும் வலிமைப் படுத்துகிறான். அப்பால் ராவணன் மந்திராலோசனை கூறுமாறு கேட்கிறான் என்பது வால்மீகி கதை.

இனி நாம் கம்பன் ராவணனது மந்திராலோசனையை எப்படி நடத்தத் தொடங்குகிறான் என்பதைக் கவனிப்போம். அனுமனால் எரியுண்ட இலங்கையைத் தெய்வத் தச்சன் பிரமனோடும் புகுந்து செப்பனிட்டுப் புதுப்பிக்கிறான். இது வால்மீகத்தில் காணப்படவில்லை.

'முன்னையின் அழகுடைத்(து)!'
என்று மொய்கழல்
மன்னனும் உவந்துதன்
முனிவு மாறினான்

என்பது கம்ப சித்திரம்.


'லண்டன் பெருந்தீ' என்பது சரிதப் பெரு நிகழ்ச்சிகளில் ஒன்று. எரிந்தமா நகரம் முன்னையிலும் அழகுடன், ஆரோக்கிய வசதிகளுடன், புதுப்பிக்கப் பெற்று விட்டது. எனவே 'லண்டன் எரியுண்டதும் நன்றே! இல்லாவிட்டால் இப்படி ஒரு புதுமைப் பெரு நகரம் நமக்குக் கிடைத்திருக்குமா?' என்று கூறுவதுண்டு. இதுதான் இப்போது ராவணன் மனநிலையும்.

இனி, மந்திராலோசனை விவரங்களை உற்று நோக்கி மகிழ்வதற்கு முன், இம் மந்திராலோசனை மண்டபத்தின் வெளியே காவலாக நிறுத்தப்பட்டிருக்கும் அரக்க வீரர்களை ஒரு பார்வை பார்த்து விடலாமே :

திசைதொறும் நிறுவினன்
உலகு சேரினும்
பிசைதொழில் மறவரை!
பிறிதென் பேசுவ?

உலகமே ஒன்றாய்த் திரண்டு எதிர்த்து வந்தாலும், அந்த உலகத்தை அப்படியே பிசைந்து விடுவார்களாம், ஏதோ மாவைப் பிசைவது போல. காவலின் கடுமை குறித்து இதற்கு மேல் என்ன சொல்ல முடியும்?


'உலகம் எனக்கு ஒரு சிப்பி; என் வாளால் பிளந்து விடுவேன்!' என்ற மேற்புல மகா கவிஞனது வாக்கை இந்த அரக்க மறவர்கள் நினைவூட்டுகிறார்கள்.



உதவி மானேஜர் :— "ஸார்! அவங்க இரண்டு பேரையும் ஒரு விசிறி கீழே உட்கார வைக்கக் கூடாது, ஸார்!..."

மானேஜர் — "ஏன், பேசிப் பொழுது போக்கி விடுகிறாங்களோ?"

உதவி மானேஜர் :— "இல்லே, ஸார்! சண்டை போடறாங்க! விசிறி போட்டால் தலை கலையுது, போடாதேன்னு ஒருத்தர் சொல்கிறார். விசிறியை நிறுத்தினா மண்டை வெடிச்சுப் போயிடும்னு மற்றவர் கூச்சல் போடறார்!"



பி. ஸ்ரீ.

95. கண்டு வந்ததா, கொண்டு வந்ததா?

ராவணனுடைய சபா மண்டபத்தை வால்மீகி முனிவர், வெள்ளியாலும் தங்கத்தாலும் செய்த தம்பங்களைப் பெற்றுப் படிகக் கற்கள் பதித்த நடு இடத்துடன் பொருந்திப் பொற் பட்டாடைகளால் இயன்ற மேல் விரி அல்லது திரையுடன் அழகாய் விளங்குகின்ற ஒரு மண்டபமாகக் காட்டுகிறார்.

அந்தச் சபைக்குள் ராவணனுடைய ஆசனத்தை வைடூரியக் கற்களினால் செதுக்கப் பெற்று ஒருவகை மிருகத்தின் தோலால் வேயப்பட்டுத் திண்டு இட்டிருந்த பெரியதொரு சிறந்த ஆசனமாய்க் காட்டுகிறார் முனிவர் பெருமான்.

சிங்காசனத்தில் ராஜ சிங்கம்

கம்பன் ராவணனுக்குரிய மந்திராலோசனை மண்டபத்தையும், அதில் இட்டிருக்கும் சிங்காதனத்தையும், அச் சிங்காதனத்தில் ஜம்மென்று வீற்றிருக்கும் ராவணனையும் பின் வரும் வசீகரமான சிறு பாட்டில் எப்படிச் சித்திரித்துக் காட்டுகிறான் என்பதைப் பார்க்கலாம்:

அவ்வழி ஆயிரம்
ஆயிரம் அவிர்
செவ்வழிச் செம்மணித்
தூணம் சேர்த்திய
அவ்வெழில் மண்டபத்(து),
அரிகள் ஏந்திய
வெவ்வழி ஆசனத்(து)
இனிது மேயினான்.

[அவ்வழி-அப்போது. ஆயிரம் ஆயிரம் அவிர்—ஆயிரம் ஆயிரமாக விளங்குகிற. செவ்வழி—செவ்வி அல்லது அழகு வழிவது போன்ற தோற்றத்தைக் கொண்ட. செம்மணி—சிவந்த ஒருவகை மாணிக்கக் கற்கள் பதித்த. தூணம்—தூண்கள். சேர்த்திய—நாட்டப்பெற்ற. அவ் எழில் மண்டபத்து—அந்த அழகு பொங்கும் மண்டபத்திலே. அரிகள்—சிங்கங்கள். வெவ்வழி ஆசனத்து—வெம்மை அல்லது கடுமை வழிவது போலத் தோன்றும் ஆசனத்திலே. மேயினான்—மேவினான்; தங்கினான்.]

பல சிங்கங்கள் ஏந்திக்கொண்டிருப்பதுபோல் இயன்ற ஆசனமே உக்கிரம் பொங்கி வழிவதுபோல் அமைக்கப்பட்டிருக்கிறதாம். பயப்படுவதற்கு ராவண உக்கிரத்தைக் கூடப் பார்க்க வேண்டாம்.

பின்னர் அங்கதன் தூது போய் ராவணனைக் குறுகி நின்று பார்க்கும்போது ராவணேசுவரன்,

கொடுந்தொழில் மடங்கல்
அன்னான்

[மடங்கல்—ஆண்சிங்கம்.]

—அதாவது பெரும் பசியால் கொடுந் தொழிலுக்குத் தயாராகிப் பாயப் போகும் ஆண் சிங்கத்தை ஒத்தவன் என்று வருணிக்கப் படுகிறான். அவனே இப்போது ஏந்தி நிற்கும் ஆசனமோ கொடுந் தொழிற் சிங்கத்தைத் தாங்கும் கொடுந் தொழிற் சிங்கக் கூட்டம் போல அமைந்து நிற்கிறதாம்.

இரத்தச் சிவப்பான மணிகள் அழுத்திய தூண்கள். ஆயிரம் ஆயிரமாகப் பயங்கர அழகு பொழிகின்ற மண்டபத்திலே பயங்கரமும் அழகும் திரண்டது போல் சிங்கங்கள் திரண்டு சுமக்கும்

அரியணையில் வீற்றிருக்கின்றான் அரக்கர்களின் ராஜசிங்கம்.

இனி இதிலுள்ள விஷயத்தைவிட அந்த விஷயத்தை வெளியிடும் கவியமைப்பு முறையைக் கவனித்துப் பாருங்கள் : என்ன அபூர்வ எளிமை! எத்தகைய இன்னிசை! எவ்வளவு உணர்ச்சியுடன் விஷயம் தன்னை வெளியிட்டுக் கொள்கிறது! கவிதைக்கு உணர்ச்சி தானே உள்ளுறை உயிர்.

சொல்லைக் கவிதையின் உடம்பென்றும், பொருளை உயிரென்றும் கூறுவர் நன்னூலார். அப்படியானால் உணர்ச்சி மயமான இன்னிசையை உயிருக்கும் உயிர் என்றுதான் கூறவேண்டும்.

இந்த உணர்ச்சி கவிதாரூபம் பெறும் போது தான் கவிதை கிடைக்கிறது. இதை ரஸிகமணி டி.கே.சி. பாவ ரூபம் என்று வற்புறுத்துவதுண்டு.இந்த ரூபம் படைக்கப் பெறவில்லை யென்றால் கவிஞனின் இதயம் நம் இதயம் தொட்டுப் பேசமுடியாது.

கவிஞனது பாட்டைப் பாடிப் பார்க்க வேண்டும்; படித்துப் பார்த்தால் போதாது. ஆனால் சங்கீதம் பாடுவது போல் பாட வேண்டும் என்பதில்லை; அப்படிப் பாடுவது கவிதையை ரஸிப்பதற்கு இடையூறாகவும் ஏற்படலாம். கவிதையும் (வேத மந்திரம் போல்) ஓதப் பெறவேண்டும் என்பது கம்பன் குறிப்பு.

அப்படி ஓதி ஓதி அனுபவிக்கும்போது எதுகை மோனை முதலிய செய்யுள்உறுப்புக்கள் எப்படிக் கவியிலுள்ள உணர்ச்சிகளை வெளியிட உதவுகின்றன என்பது இனிது புலனாகும்.

கற்குவியல் கட்டடமாகாது; சொற்குவியலும் கவிதையாகாது. சொற்களின் ஒரு வகை மந்திரச் சேர்க்கையே கவிஞனின் சொற்கலை. கவிஞனது இதயத்திலுள்ள சிருஷ்டி தத்துவம்தான் இத்தகைய—இன்னிசை ததும்பும்—மந்திரச் சொற் சேர்த்தியால் கவிதா ரூபத்தைப் படைத்து விடுகிறது.

இக் கவிதா ரூபம் தான், கவிஞன் கருதும் பொருளை மட்டுமன்றி அந்த இதயத்திலே சிருஷ்டி சக்தியால் பொங்கிய கவிதைப் பேரின்பத்தையும் நம் இதயத்தில் பாயச் செய்கிறது.

இக் குறிப்புக்களைத் தெரிந்து கொண்டு, ராவணன் ஆலோசனை மண்டபத்திலே சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அந்தப் பாட்டை ஓதி ஓதி அனுபவித்துப் பாருங்கள் :

அவ்வழி ஆயிரம்
ஆயிரம் மவிர்

என்று பாட ஆரம்பித்ததும் அந்த உக்கிர அழகு வாய்ந்த தூண்கள் கண்ணெதிரே ஓடி வரும், ரயிலில் போகும் போது மரங்கள் கண்ணெதிரே ஓடி வருவதுபோல.

'ஆயிரம் அவிர்' என்பதை 'ஆயிரம் மவிர்' என்று விரித்துப் பாடுவது கூட உணர்ச்சி விம்மி எப்படிச் செய்யுளுருவம் பெறுகிறது என்பதை ஒருவாறு உணர்த்த உதவும்.

இத்தகைய வசிகரமான கவிதை யுருவத்தை அடுத்த பாட்டிலும் பார்க்கிறோம். இப்பாட்டிலே, சிங்காதனத்திலிருக்கும் ராவணேச்வரனைச் சுற்றத்தாரும் மந்திரிமாரும் சேனைத் தலைவர்களும் எவ்வளவு ஆர்வத்துடன், ராஜபக்தியுடன் அணுகி இருக்கிறார்கள் என்பது புலனாகும்.

இருபுறமும் தேவமாதர் (அரம்பையர்) இருந்து கவரி வீச அரக்கர் கோன் சுற்றத்தார் முதலியோருடன் கொலுவிருக்கும் இக் காட்சிப் படத்தை இதோ பாருங்கள் :

வரம்பெறு சுற்றமும்,
மந்தி ரத்தொழில்

நிரம்பிய முதியரும்,
சேனை நீள்கடல்

தரம்பெறு தலைவரும்
தழுவத் தோன்றினான்,

அரம்பையர் கவரியோ(டு)
ஆடும் தாரினான்.

[வரம் பெறு—ராவணேச்வரனுக்குச் சுற்றமாயிருக்கக் கொடுத்து வைத்தவர்களாய் வரம் பெற்றிருக்கும். சுற்றம் – சுற்றத்தவர். முதியரும் – வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்களும். சேனை நீள் கடல் – பரந்த சமுத்திரம் போன்ற சேனைகளிலே. தரம் பெறு – தகுதிக்கு இசைந்தவாறு ராணுவ வரிசைக்கு உட்படுத்தப் பெற்றிருக்கும். அரம்பையர் – (இங்கே பொதுவாகத்) தேவ மாதர்கள், கவரியோடு – சாமரையுடனே. தாரினான் – மாலையை அணிந்திருக்கும் ராவணன்.]

இந்தப் பாட்டின் உருவத்தை உற்று நோக்கி அறிந்து கொள்ள வேண்டும்; அதாவது, ஓதி ஓதி உணர்ந்து கொள்ள



வேண்டும். எவ்வளவு எளிமையாக ராவணனுடைய அந்தக் கொலுமாட்சி நம் கண்ணுக்கு இலக்காகி விடுகிறது, இந்த ஓசைச் சித்திரத்திலே!

வரம்பெறு சுற்றமும்

என்று எடுக்கும்எடுப்பு, '*நிரம்பிய மதியனும்*' என்றும், '*தரம் பெறு தலைவரும்*' என்றும், எதுகையில் அமைக்கும் அமைப்பு முதலியன எல்லாம் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றன.

தழுவத் தோன்றினன்

என்பது உணர்ச்சியின் உச்ச நிலை.

தலைவரும் தழுவ

பாக்கியசாலிகளான சுற்றத்தார்கள் ஆவலோடு வந்து அணுகி யிருப்பதையும், ராவணனுடைய தொழிற் பணியிலே ஊறி வளர்ந்து நரைத்துப் போன மந்திரக் கிழவர்கள் தங்கள் பழுத்த அறிவுடன் நெருங்கி இருப்பதையும், ராணுவ வரிசைக் கிரமத்திற்கு வழுவின்றிக் கட்டுப்பாடு குலையாது சேனைத் தலைவர்கள் நெருங்கியும் நெருங்காமலும் நிற்பதையும் '*தழுவ*' என்ற சின்னஞ் சிறு வார்த்தை எவ்வளவு தெளிவாய்க் காட்டி விடுகிறது.

தரம்பெறு தலைவரும்
தழுவத் தோன்றினன்.

என்றவாறு மோனையில் கொலுவிருந்து!

தேவாரம் பாடிய பெரியார் 'தழுவும்' என்ற சொல்லைப் பின் வருமாறு உபயோகப்படுத்தி யுள்ளார்.

தாயி லானைத்
தழுவும்என் ஆவியே.

தனக்கொரு தாயில்லாத கடவுள் என்ற தாயுள்ளத்தை ஆவி தழுவிக் கொள்வதாகக் கூறித் தம் பக்தி யென்னும் உயிராசையை வெளியிடுகிறார்.

தெய்வ பக்தியால் அப்பருக்கு ஏற்பட்ட அனுபவம் நம் பாரதியாருக்குக் குழந்தைமீதுள்ள பக்தியால் ஏற்பட்டு அதே மந்திரச் சொல்லைப் பயன்படுத்திக் கொள்ளுகிறது :

ஆடித் திரிதல் கண்டால் —
உன்னைப் போய்
ஆவி தழுவுதடி !

(கண்ணம்மா—என் குழந்தை)

இப்பொழுது ஓதி உணர்ந்து கொள்ளுங்கள், 'தழுவ' என்ற சொல்லில் கம்பன் காட்டியுள்ள புதை பொருளாகிய உணர்ச்சிப் பெருக்கினை :

தரம்பெறு தலைவரும்
தழுவத் தோன்றினன்.

ராணுவ வீரர்கள், மந்திரிமார்களின் ராஜபக்தியும், சுற்றத்தார்களான பாக்கியசாலிகளின் உறவுப் பெருமையும், இவர்களுடைய இதயங்களி லிருந்து குதி போட்டுச் சென்று, ராவணாகாரமான அந்த ஆட்சிப் பெருமையையும் மாட்சிமையையும் தழுவிக் கொள்கின்றனவாம். சபை நெருக்கமும் உணர்ச்சி நெருக்கமும் ஒருங்கே சித்திரிக்கப் பெறுகின்றன.

கண்ணாரக் காண்கிறோம் !

இனி ராவணனுடைய நெஞ்சின் ஆட்டங்களையும் ஓட்டங்களையும் மூன்று பாடல்களின் வாயிலாகப் பார்க்கலாம் :

முனைவரும் தேவரும்
மற்றும் முற்றினர்
எனைவரும் தவிர்கென
ஏய ஆணையான்,
புனைகுழல் மகளிரோ(டு)
இளைஞர்ப் போக்கினன்,
நினைவுறு காரியம்
நிகழ்த்தும் நெஞ்சினன்.

[முனைவரும் — முனிவரும். மற்றும் முற்றினர் எனைவரும்—மற்றும் நிரம்பியிருந்த யட்சர் முதலியோர் யாவரும். தவிர்க என—அப்பால் செல்க என்று. புனை குழல் — அலங்கரிக்கப் பெற்ற கூந்தலை.]

முனிவர் முதலியோரை அன்னியரென்று அப்பால் போக்கியவன், அனுகூலர்களிலும் ஆலோசனைக்குத் தகாதவரென்று மகளிரோடு இளைஞர்களையும் வெளியே போகச் சொல்லி விடுகிறான். இப்படிச் செய்த பின்பு அழைப்பிற்கிணங்க வந்திருந்தவர்களே 'மந்திரத் தொழில் நிரம்பிய முதியரும் பிறரும்'.

இப்போது நடைபெறுகின்றது 'கப்சிப்' தர்பார் ;

பண்டிதர், பழையவர்,
கிழவர், பண்பினர்,
தண்டவில் மந்திரத்
தலைவர் சார்கெனக்
கொண்டுடன் இருந்தனன்,
கொற்ற ஆணையான்,
வண்டொடு காலையும்
வரவு மாற்றினன்.


[பழையவர்-நெடு நாளாகப் பழகியவர்கள். கிழவர்-(இங்கே) ராவணனோடு உறவு முறையுள்ளவர்கள். தண்டவில்-நீங்குதல் இல்லாத. சார்கென-வருக என்று. கொற்ற ஆணை-(இங்கே) சக்கரவர்த்தி என்ற தோரணையில் இட்ட கட்டளை. காலையும்-காற்றையும்.]

பண்டிதரும் பழையவரும் உறவு முறையுள்ளவரும் பண்பினருமான மந்திரத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப் போகிறவன், இக்கூட்டத்தை மேலும் வடிகட்டப் பார்க்கிறானும். ஆம். சுற்றத்தாரிலும் பலரை அனுப்பி விடுகிறானும் :

வான்துணைச் சுற்றத்து
மக்கள் தம்பியர்
போன்றவர் அல்லரைப்
புறத்துப் போக்கினன்

[வான் துணை-சிறந்த துணை.]

மந்திராலோசனை என்ற அந்த நிகழ்ச்சியையா கவிஞன் வர்ணிக்கிறான்? கவிதை கண்டு வந்ததா ! அல்லது அந்த ஆலோசனைச் சபையை அப்படியே, சஞ்சீவி பர்வதத்தை அனுமன் கிளப்பிக் கொண்டு வந்தது போலக் கொண்டு வந்து நம் கண் முன் வைத்து விடுகிறதா!



பி. ஸ்ரீ.

95. ராவணன் தலைமை யுரை

தசரத சக்கரவர்த்தியின் மந்திராலோசனைச் சபையில் சுற்றத்தார் அனுமதிக்கப்படவில்லை: சிற்றரசர் முதலானவர்களும் இடம் பெறவில்லை. ராவண சக்கரவர்த்தியின் மந்திராலோசனையிலோ மந்திரிமாருடன், தம்பியரும் மக்களும் போன்ற சுற்றத்தார் இடம் பெறுகிறார்கள்.

விருப்பு வெறுப்பின்றி விஷயம் ஆலோசிக்கப் பெறவேண்டு மென்பது அந்தச் சக்கரவர்த்தியின் உள்ளம். இந்தச் சக்கரவர்த்தியோ 'மனமே ராஜா; மதியே மந்திரி' என்ற போக்கில் தன் ராட்சஸ இச்சைக்கு இசைந்த ஆலோசனையைத் தான் எதிர் பார்க்கிறான்.

அப்பால் போக்கியவர்களையும் தசரத சக்கரவர்த்தி, 'தயவு செய்து மந்திராலோசனை முடியும் வரை வெளியே போயிருங்கள்' என்று பரிவுடன் (அன்புடனும் இரக்கத்துடனும்) அனுப்பி வைத்தான். ராவணனோ அதிகார தோரணையில் வேண்டாதவர்களை அப்பால் போக்கிவிடுகிறான்.

காவல்-சித்திரம்

தசரதனின் ஆலோசனைச் சபையில் இவ்வளவு கட்டுக் காவல் இருந்ததாகவும் தெரியவில்லை. அங்கே இரகசியமும் எப்படியோ கொஞ்சம் வெளிப்பட்டு நாலு பேருக்குத் தெரிந்து விட்டது. அப்படியானால் இரகசியம் பரசியம் தானே! அந்த நால்வரும் நாலு பெண்கள் என்றால், மேலும் சொல்லவா வேண்டும்!

இந்த ஆலோசனைச் சபையிலோ ராவணன்,

வண்டொடு காலையும்
வரவு மாற்றினான்.

[காலையும் – காற்றையும்.]

ஆம்; இவ்வளவு கடுமையாகக் காவலாளரை நிறுவியிருந்தான்.

இந்தக் காவலின் வருணனைப் பகுதி ஒன்றை ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்போது முழுச் சித்திரத்தையும் பார்க்கலாம்:

திசைதொறும் நிறுவினன்
உலகு சேரினும்
பிசைதொழில் மறவரை;
பிறிதென் பேசுவ?
விசையுறு பறவையும்
விலங்கும் வேற்றவும்
அசைதொழில் அஞ்சின
சித்தி ரத்தினே!

[வேற்றவும்-பறவைகளினும் மிருகங்களினும் வேறுபட்ட ஊர்வனவும். சித்திரத்தினே-சித்திரத்தில் எழுதி வைத்தவை போல.]

வான வீதியில் பறவைகள் பறந்து கொண்டிருக்குமே; நிலத்தில் மிருகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருக்குமே, அல்லது ஊர்வன ஊர்ந்து கொண்டிருக்குமே; அவை யெல்லாம் அஞ்சி அசையாது அப்படி அப்படியே நின்று விட்டனவாம்.

கண்ணன் வேய்ங்குழல் ஊத அந்த அமுத கீத வலையால் சுருக்குண்டு பிராணிகளெல்லாம் எழுதி வைத்த சித்திரங்கள் போல் அப்படி அப்படியே நின்று விட்டன என்று பெரியாழ்வார் அந்த ஜகன்மோகன வேணுகோபாலன் குழலூதிய சிறப்பைப் பாடியிருக்கிறாரல்லவா! அது அன்பிலே நிகழ்ந்த அற்

புதம்; இது (இந்த அகில லோக பயங்கரன் விளைத்திருப்பது) அச்சத்தால் நிகழ்ந்த அற்புதம்.

திசை திசை நிறுவிய பிசை தொழில் மறவர்களின் தோற்றமே இவ்வளவு பயத்திற்கும் காரணம்.

விசையுறு பறவையும்
விலங்கும் வேற்றவும்
அசைதொழில் அஞ்சின
சித்தி ரத்தினே!

என்னும் அடிகளை ஓதி ஓதிப் பார்க்கப் பார்க்க, அந்தக் காவலின் பயங்கர நிலை எவ்வளவு தெளிவாகப் புலனாகிறது! சித்திரத்தைக் கொண்டே பயமுறுத்தும் சித்திரம்!

விசையாகப் பறந்து வந்த பறவை வான வெளியில்அப்படியே நின்று விட்ட காட்சி, சித்திர ஆகாசத்திலே சித்திரப் பறவை நிற்பது போலத் தோன்றுகிறது. பூமியில் பிராணிகள் அப்படி அப்படியே நிற்பதும் சித்திரப் பூமியில் சித்திரப் பிராணிகள் நிற்பது போலவே காட்சியளிக்கின்றன!

'விசையுறு பறவையும் விலங்கும்' என்று வாசித்து விட்டு 'வேற்றவும்' என்பதை வாசிக்கும் போது, அந்த வேறுபட்ட பூச்சிகளில் மானுடப் பூச்சிகளும் அஞ்சி அடங்கி விட்டனவோ என்று தோன்றுகிறது.

'மானுடம் வென்றதன்றே' என்றவாறு மானுடத்திற்கு முடி சூட்டத்தானே ராமன் முடி கலைந்து வருகிறான்! தசரத சக்கரவர்த்தியின் மந்திராலோசனை ராமனுக்கு முடிசூட்டத் தவறிய போதிலும் மானுடம் வெற்றி-முடி சூடி மகிழ வித்திடுவ





தாயிற்று. அதாவது, ராவணனது பயங்கர ஆட்சிக்கு அஞ்சிக்கிடந்த மானுடம் உள்ளிட்ட உயிர்க் குலத்திற்கெல்லாம் விடுதலை காண உதவியது.

நினைப்பா, நெருப்பா?

இப்போது ராவணன் தன் பயங்கர ஆட்சியின் மாட்சி ஒரு குரங்கினால் மறுகி மாண்டதே என்பதாக நினைத்து மனம் புழுங்குகிறான்:

'தாழ்ச்சிஇங்(கு) இதனின்மேல்
தருவ தென்? இனி
மாட்சிஓர் குரங்கினால்
மறுகி மாண்டதால்!
ஆட்சியும் அரசும்என்
அமைவும் நன்றெ'னச்
சூழ்ச்சியின் கிழவரை
நோக்கிச் சொல்லுவான்.

[மறுகி – கலக்குண்டு. நன்று என – 'நன்று!' என்று இகழ்ச்சி தோன்ற எண்ணி. சூழ்ச்சியின் கிழவரை – ஆலோசனைக்குரிய மந்திரிமாரை.]

இந்த நினைப்பே நிமிர்ந்து கனன்று பேச்சாகப் புகைகிறது. 'வீரம் பழியுண்டதே; மானம் பழியுண்டதே!' என்று இருதயம் அலறுகிறது மந்திரிமாரை நோக்கி, இந்தப் பாட்டின் வாயிலாக:

சுட்டது குரங்(கு); எரி
சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர்;
கிளையும் நண்பரும்
பட்டனர் பரிபவம்;
பரந்த தெங்கணும்;
இட்டதிவ் அரியணை
இருந்த தென்னுடல்!

[எரி – நெருப்பு. சூறையாடிட – கொள்ளை கொள்ளும்படி. கொடிநகர் – என் கொடி பறக்கின்ற நகரம். கிளையும் – சுற்றத்தாரும். பரிபவம் – அவமானம்.]

'சுட்டது குரங்கு' என்று தொடங்குகின்ற எளிமையே, ராவணன் பெருமை இப்போது எப்படித் துடிக்கிறது என்பதைக் காட்டுகிறது. 'சுட்டது' 'கெட்டது' 'பட்டனர்' என்று வரும் எதுகைகள் எவ்வளவு வயிற்றெரிச்சலைக் கொட்டுகின்றன!

குரங்கு தான் சுட்டதென்றால், அந்த நெருப்பிற்குப் புத்தி எங்கே போச்சு?— அந்த நெருப்பும் எரியவேணுமா, சூறையாட வேணுமா?

அந்த எரி தான் எரித்ததென்றால் இந்த நகரம் ஏன் அழியவேணும்? – என்

கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் நகரமாயிற்றே! இப்படியெல்லாம் ராவணாகாரமாகச் சிறிச் சிதறுகின்றன வார்த்தைகள்; நெருப்பை வாரிக் கொட்டுகிறது உள்ளம்.

இதயத் துடிப்பின் இசை

'இளையும் நண்பரும் பட்டனர்'

என்று சொல்லும்போது தான், 'ஐயோ!' என்று சீற்றம் சோகமாகிறது; அவமான உணர்ச்சி மேலிடுகிறது.

இந்த உணர்ச்சியைத் தான் வெளியிடுகிறது 'பரிபவம் பரந்தது எங்கனும்' என்பது. மூச்சுவிடும் காற்றிலும் பரிபவம் பரயிக் கலந்திருப்பது போல் அல்லவா தோன்றுகிறது? காற்றிலும் நுட்பமான ஆகாயம் போல் எங்கும் பரந்து விட்டதோ ராவணேச்வரனுடைய அவமானம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

இந்த நிலையில் மழுங்கித் துடிக்கிறது நெஞ்சு, 'இந்தச் சிங்காதனமும் இப்படிப் படாடோபமாய் இங்கு இடப் பெற்றிருக்க வேணுமா?' என்று.

இருந்த(து) என்உடல்!

என்பது இப்பாட்டின் சிகர உணர்ச்சி.

உடல்தான்-வெறுங்கூடு தான்—இருக்கிறதாம் சிங்காதனத்தின் மீது,—ஏதோ ஒரு கொலுப் பொம்மை போல. உணர்ச்சியில்லை, உயிரில்லை, – பிரேதத்தை அலங்கரித்து வைத்திருக்கிறது!

இப்படியெல்லாம் பத்துத் தலைகளும் கதறுவது போல் அமைந்திருக்கும் இப்பாட்டை ஓதி ஓதி உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியானால் கூடு விட்டுக் கூடு பாய்ந்து ராவணனுடைய நெஞ்சில் நிகழ்வதை, நஞ்சு பரவுவது போல் பரிபவம் பரவத் துடிக்கும் அந்த நெஞ்சை, அப்படியே கண்டு கொள்வோம்.

இது ஓர் இசைச் சித்திரம். இசை இன்னிசையுமன்று. ஆனால் மானம் புண்பட்ட வீர மன்னனின் இதயத் துடிப்பையே இசையாக வடித்திருக்கிறது இங்கே!

என்ன பேச்சு, என்ன சோர்வு!

மனம் விட்டு வாய் விட்டு நெருப்புக் கங்குகளைக் கக்குவது போலக் கக்கிப் பார்க்கிறான் வார்த்தைகளை:

ஊறுகின் றனகிண(று)
உதிரம் ; ஒண்ணகர்
ஆறுகின் றிலதழல் ;
அகிலின் ஆவிஒத்(து)
ஏறுமங் கையர்நறுங்
கூந்த லின்சுறு
நாறுகின் றது;நுகர்ந்
திருந்த நாமெலாம்!


[ஊறுகின்றன கிணறு உதிரம்-கிணறுகளில் தண்ணீர் சுரப்பதற்குப் பதிலாக உதிர நீர் சுரக்கின்றது. ஒண்ணகர் – நமது அழகிய லங்காபுரியிலே. ஆறுகின்றில தழல் –அப்போது மூண்ட அக்கினி வெப்பம்இன்னும் ஆறிய பாடில்லை. அகிலின் ஆவி – அகிற்புகை. ஒத்து – பொருந்தி. ஏறு மங்கையர் – சிறப்புற்ற மங்கைமாரின். நறுங்கூந்தலின்-வாசனையுள்ள கூந்தலினின்று. சுறு – ரோமம் தீயில் பொசுங்குவதால் உண்டாகும் நாற்றம்.]

மற்றில தாயினும்,
'மலைந்த வானரம்
இற்(று)இல தாகிய(து)!'
என்னும் வார்த்தையும்
பெற்றிலம் ; பிறந்திலம்
என்னும் பேறலால்
முற்றுவ தென்? இனிப்
பழியின் மூழ்கினும்,

[மற்றிலதாயினும்–வேறு விசேஷமாக நாம் ஒன்றையும் சாதிக்கவில்லை யென்றாலும். மலைந்த – இங்கே வந்து போர் செய்த. இற்று இலது ஆகியது – நைந்து இனி இல்லை என்பதாக ஒழிந்து போய்விட்டது. பெற்றிலம்–நாம் பெற்றோமில்லை. பிறந்திலம் – பிறந்தும் பிறவாதவரானோம். முற்றுவது என் – இனி நாம் செய்து முடிக்க வேண்டியது தான் என்ன இருக்கிறது. மூழ்கினும் – மூழ்கினோம்.]

ஏதோ நெருப்பை விழுங்கமாட்டாமல் விழுங்கி விக்கிக் கக்குவது போல் வந்து விழுகின்றன வார்த்தைகள். இதற்கு மேல் பேசவும் முடியவில்லை. அப்படியே திணறிக் களைத்துப் போய் மௌனமாகிச் சாய்ந்து விடுகிறான்.

தசரத சக்கரவர்த்தியின் மந்திராலோசனைப் பேருரை நிதானமாய்ப் பல பாடல்களில் வெளிப்படுகிறது. ராவணனுடைய மந்திராலோசனைப் பேருரையோ மூன்றே பாடல்களில் முற்றுப் பெறுகின்றது. பிறகு பிறர் பேசுவதைக் கேட்டுக் கொண்டுதானிருக்கிறான், தான் குறுக்கிடாமலே.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

96. சேனாபதி பேச்சு

மந்திரிகளிடம் மனக் குறையை வெளியிடத் தொடங்கிய ராவணன், தன் ஆட்சியையும் மாட்சியையும் ஒரு குரங்கே சுட்டழித்து விட்டது என்பதாக உளம் எரியப் பேசத் தொடங்கினான். 'அந்தக் குரங்கு இப்போது தொலைந்து இல்லாமலே போய் விட்டது என்பதாகக் கேள்விப் படவுமில்லையே; பழியில் இப்படி மூழ்கிப் போனோமே' என்று முடித்தான். ஓய்ந்து சோர்ந்து அப்படியே மௌனமாகி விட்டதும், படைத்தலைவன் எழுந்து தன் கருத்தை வெளியிடுகிறான்.

தசரத மந்திராலோசனைச் சபையிலே முதன்மையான பதவி படைத்தலைவனுக்கன்று. காவல் இல்லாமலே ஆணை செல்லும் தர்ம ராஜ்யமல்லவா? அத்தகைய ஆக்ஞாசக்கரத்தின் அதிதேவதை (ஆணையங் கடவுள்) வசிஷ்டமா முனிவரல்லவா? அவரே அமைச்சர் சபையில் முதல்வராக இருக்கிறார்.

ராவண மந்திராலோசனையிலோ படைத்தலைவன் தானே முதல் மந்திரி பதவியையும் ஆக்கிரமிப்பது போல் பேசத் தொடங்குகிறான். எங்கே பார்த்தாலும் கட்டும் காவலுமாயிருக்கும் ராணுவ மகாராஜ்யமல்லவா?

சேனை நாயகன் எழுந்து வணங்கிப் பிறகு நிமிர்ந்து நின்று தன் ஆலோசனையை வெளியிடுகிறான்:

என்றவன் இயம்பலும்,
எழுந்திறைஞ்சினான்
கன்றிய கருங்கழற்
சேனை காவலன்,
'ஒன்றுள(து) உணர்த்துவ(து)
ஒருங்கு கேள்' என
நின்றனன் நிகழ்த்தினன்,
புணர்ப்பின் நெஞ்சினான்.

[கன்றிய—உளம் வருந்திய. கருங்கழல்—பெருமை பெற்ற வீரக்கழல். உணர்த்துவது — உணர்த்த வேண்டிய செய்தி. ஒருங்கு — முற்றிலும்.]

முன்னமே ஒரு மந்திராலோசனை

இந்தச் சேனை நாயகன் முன்னமே தன் ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறான். 'அதைப் பற்றுக் கோடாகப் பற்றிக் கொள்ள வில்லையே எஜமானர்' என்று இப்போது வருந்துகிறான் வாய் விட்டு:

வஞ்சனை மனிதரை
இயற்றி வாள்நுதல்
பஞ்சன மெல்லடி
மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழிலென
அறிவித்தேன், அது
தஞ்சென உணர்ந்திலை,
உணரும் தன்மையோய்!

[வாள்நுதல் — ஒளியுள்ள நெற்றி. பஞ்சு அன மெல்லடி — பஞ்சு போன்ற மெல்லிய அடிகள். மயில் — (இங்கே) சீதை. தஞ்சென — தஞ்சமென்று; பற்றுக்கோடாகும் என்று.]

மயிலைப் பற்றுதல் நெறி தவறினவர்களின் தொழில் என்பதை இவன் அறிந்து கொள்ள வில்லை. அப்போதும் இல்லை; இப்போதும் இல்லை. வேடன் ஓர் அழகான மயிலைப் பற்றிக் கொண்டு வரும் உரிமை பெற்றிருக்கிறானல்லவா

— அதே காட்டுச் சட்டம் தான் அரக்கர்களின் நாட்டுச் சட்டமும். இது சேனாபதி கொள்கை. ஆனால் மனிதரை வஞ்சனை செய்து சீதை யென்ற மயிலைப் பற்றிக்கொண்டது 'அஞ்சினர் தொழில்' என்கிறான்.

மனிதரைக் கொன்று மயிலைப் பற்றுதல் ராட்சஸ தருமம் தான் என்பது குறிப்பு. சரித்திரத்திலே மனித அரக்கர்களும் இப்படி நடந்து கொண்டதாகக் கேள்விப்படுகிறோமல்லவா?

'அஞ்சினர் தொழில்' அரக்கர் தொழிலன்று, அஞ்சாநெஞ்சராய் அறத்தையும் தாக்கி வெற்றி காண்பதே அரக்கர் குறிக்கோள். 'அஞ்சினர் தொழில்' என்று கருதக் கூடிய வஞ்சனைத் தொழில்கள் தவிர்க்கப் படவேண்டும் என்பது இந்த அரக்கன் கருத்து.

இந்தப் புத்திமதியை ஏற்கெனவே இச்சேனாபதி ராவணனுக்கு அறிவித்திருக்கிறான். 'வஞ்சித்து மயிலைப் பற்றுதல் அஞ்சினர் தொழில் என அறிவித்தேன்' என்று இவன் இப்போது கூறுவதால், சீதையை ராவணன் கவர்ந்து கொள்வதற்கு முன்பே, — அதற்காக ஒரு மந்திராலோசனை நடத்திய போதே — சேனாபதியின் இந்த அறிவிப்பு நிகழ்ந்திருக்கவேண்டும் என ஊகிக்கலாம்.

அந்த மந்திராலோசனை எப்போது நிகழ்ந்தது? ஆரணிய காண்டத்திலே, சூர்ப்பணகை ராவணனை நோக்கிச் 'சீதையை நீ காலதாமதம் செய்யாமல் எடுத்து வருவாயாக' என்றாள். அரக்கர் கோனும் தன் அமைச்சர்களோடு ஆலோசித்துப் பின்பு மாரீச மாமாவிடம் சென்றான்.

அந்த மந்திராலோசனை-முயற்சி, ஒன்றே முக்கால் செய்யுளிலேயே முற்றுப் பெறுகின்றது.

'ஆற்றலால் அடுத்த(து)
என்னும் அமைச்சரைக்
கொணர்திர்' என்றான்.

என்பது ஒரு செய்யுளின் கடைசி அடி.

இதனால் ஆலோசனைத் திறமையில் நிபுணர்களான மந்திரிகளே அப்போதும் வந்திருந்தார்கள் எனத் துணியலாம். ராவணனால் கட்டளை யிடப்பட்ட ஏவலர்கள் அழைக்க, அவர்கள் விரைந்து வந்து சேர்ந்தார்கள்.

ஏவலாளர்கள் ஓடிப் போய்க் கூவி அழைப்பதும், அமைச்சர்கள் கொடி கட்டிய தேர்களிலும் குதிரைகளிலும் பல்லக்குகளிலும் யானைகளிலும் ஏறி வருவதும், அந்த வருகையே தேவர்களையும் முனிவர்களையும் சிந்தை குலையச் செய்வதும் ஒரு முழுப் பாட்டில் வருணிக்கப்பட்டன. அந்த மந்திரிகளுடன் ராவணன் ஆலோசனை செய்தானென்பது அடுத்த பாட்டிலே பிரஸ்தாபிக்கப் பட்டது.

அந்த மந்திராலோசனை நிகழும்போது ராவணனுடைய நிலை எப்படியிருந்தது என்பதையும், அரக்கர்கோன் எப்படி அந்த மந்திராலோசனையைச் செய்து முடித்துக் கொண்டான் என்பதையும் வருணிக்கக் கவிஞனுக்கு ஒரு முழுப் பாட்டும் தேவையில்லை யென்றே தோன்றுகிறது.

ஏவலர் அழைத்ததையும் அமைச்சர்கள் வந்ததையும் ஒரு பாட்டில் வருணித்தவன், அந்த மந்திராலோசனையை ஒரு செய்யுளின் ஒரு பாதியிலேயே முடித்து விடுகிறான்,

வந்தமந் திரிய —
ரோடு மாசற
மனத்தின் எண்ணிச்

சிந்தையில் நினைந்த
செய்யும் செய்கையன்
தெளிவில் நெஞ்சன்....

என்பதாக.

இம் மந்திரிகளில் ஒருவனைத் தான் சேனாநாயகனும் பேசியிருக்க வேண்டும். அப்போது தான் 'மனிதரை வஞ்சித்து மயிலைப் பற்றுதல் அஞ்சினர் தொழில்' எனச் சேனாபதி அறிவித்திருக்க வேண்டும். இந்தப் புத்திமதியை ராவணன் இருபது காதுகளில் எந்தக் காதிலும் வாங்கிக் கொள்ளவேயில்லை யென்று ஊகிக்கலாம்.

'வந்த மந்திரியரோடு மாசற மனத்தின் எண்ணி' என்று கவிஞன் கூறுவதிலிருந்து, மந்திரிகளோடு கலந்து ஆராய



வில்லையே என்னும் மாசு அல்லது குற்றம் ஏற்படாமலிருக்கும்படி ராவணன் மந்திராலோசனை நடத்தினான் என்று ஊகஞ் செய்யலாம். 'மனத்தின் எண்ணி' என்பதில், மந்திரிமார்கள் ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராவணன் தன் மனம் போனபடி எண்ணிக் கொண்டிருந்தான் என்பதும் குறிப்பு.

வந்த மந்திரிமார்களோடு உடல் வீற்றிருந்தது. ஆனால் உள்ளம், தான் எண்ணியதையே எண்ணி அந்த எண்ணத்தை எப்படி நிறைவேற்றுவது என்றே எண்ணமிடலாயிற்று. பிறருடைய 'ஆலோசனை – மாசு' படிந்துவிடாமலே எண்ணங்கள் ஓடி உள்ளத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன என்றுகூடப் பொருள் கொள்ளலாம். அடுத்த செய்யுளடி,

சிந்தையில் நினைந்த
செய்யும் செய்கையன்,
தெளிவில் நெஞ்சன்

என்பதல்லவா!

ராவணனுடைய பிடிவாதமும் குழம்பிய உள்ளமும், சேனை நாயகன் அப்போது என்ன தான் சொன்னான் என்ப



தையும் ஊன்றி உணர்ந்து கொள்ள முடியாதபடி செய்திருக்க வேண்டும்.

ஆனல் அந்த மனப்பான்மையை இந்தப் பிரகஸ்பதியா உணர்ந்து கொள்ள வல்லவன்?

பேச்சின் தொடர்ச்சி

இச் சேனபதியின் பெயரைப் பிரகஸ்தன் என்று வால்மீகி குறிப்பிடுகிருர். இவன் இன்னும் என்ன சொல்லித் தன் புத்திமதியே ராவணனுக்குத் தஞ்சம் என்பதை வற்புறுத்தப் போகிருன் என்று மேலே பார்க்கலாம்.

மனிதர்களைத் தண்டிக்க வஞ்சனை தான் போதுமா? 'கொலைத் தண்டனைக்கே உரியவர்கள் அக்கள்வர்கள், அக் கோழைகள்!' என்று கர்ஜிக்கிருன் சேனபதி.

எதிரிகள் எப்படிக் கள்வரும் கோழைகளுமாயிருக்கிருர்கள் என்பதையும் தெளிவு படுத்துகிருன்:

கரன்முதல் நிருதரைக்
கொன்ற கள்வரை,

விரிகுழல் உங்கைமூக்(கு)
அரிந்த வீரரைப்,

பரிபவம் செய்ஞரைப்
படுத்தி லாதநீ

அரசியல் அழிந்ததென்(று)
அயர்தி போலுமால்

[கரன் முதல் நிருதரை – கரன் முதலிய அரக்கர்களை. விரி குழல் உங்கை – தலைவிரிகோலமாய் நிற்கிற உன் தங்கையை. பரிபவம் – அவமானம். செய்ஞரை – செய்பவர்களை. படுத்திலாத நீ – இன்னும் கொன்று விடாமல் இருக்கிற நீ. அயர்தி போலும் – அயர்ந்து போகிருய் போலும்.]

கரன் முதலிய அரக்க வீரர்களை ஒழுங்கான போராட்டத்தில் வதைத்திருக்க முடியாது என்பது சேனபதியின் நம்பிக்கை. காட்டிலே பதுங்கியிருந்து கொலைகாரன் தந்திரமாய்த் தாக்கித் தன்னைக் காட்டிலும் பலசாலிகளையும் கொன்று விடுவது போலக் கரதூஷணுதியரையும் ராமலட்சுமணர் வதைத்திருக்க வேண்டும் என்பது குறிப்பு.

'அந்தப் போராட்டத்திலே வீரம் விளங்கவில்லை; தலைவிரிகோலமாய் நிற்கிருளே உன் தங்கை, அவளை மூக்கரிந்த வீரம் தான் வீரம்?' என்று ஓர் ஏளனச் சிரிப்புச் சிரிக்கின்றன கோரப் பல்லும் மீசையும் கிருதாவும். அப்படிக் கள்ளத்தனமாகக் கரன் ஆதியரைக் கொன்று தங்கையையும் மூக்கரிந்த செயல்களைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருந்ததால் தான், குரங்கையும் நம் மேல் ஏவி விட்டுத் தொடர்ச்சியாகப் பரிபவம் செய்யத் தொடங்கினர்கள் அம்மனிதர்கள் என்கிருன்.

'இன்னும் சும்மா இருந்துவிட்டால், குரங்கு மட்டுமா, கொசுவும் நம்மேல் வந்து தாக்கும்!' என்கிருன் சேனபதி:

விலங்கினர் உயிர்கெட
விலக்கி மீள்கலா(து)

இலங்கைலன் இனிதிருந்(து)
இன்பம் துய்த்துமேல்,

குலங்கெழு காவல!
குரங்கின் தங்குமோ?

உலங்கும்நம் மேல்வரின்
ஒழிக்கற் பாலதோ?

[விலங்கினர் – பகைவர். குலம் கெழு காவல – அரக்கர் குலம் விளங்க வந்த அரசே. உலங்கு – கொசு.]

முடிவுரை

சேனபதி மடமடவென்று முடிவுரைக்கு வந்து விடுகிருன்:

'போயின குரங்கினைத்
தொடர்ந்து போய், இவண்


ஏயினர் உயிர்குடித்(து)
எவ்வம் தீர்கிலம்,

வாயினும் மனத்தினும்
வெறுத்து வாழ்துமேல்,

ஓயும்நம் வலி'யென
உணரக் கூறினன்.

[எவ்வம் – மன வருத்தம். தீர்கிலம் – தீர்த்துக் கொள்ளாமல்.]

'குரங்கு சுட்டதே!' என்று குறைபாடு தெரிவித்த அரக்கர்கோனுக்குத் தன் முடிவுரையில் சேனை நாயகன், 'அதே குரங்கைத் தொடர்ந்து போய் ஏவி விட்டவர்களின் உயிர் குடித்துக் கூத்தாடியிருக்க வேண்டும்; அதுவே வாழும் முறை!' எனக் கூறி முடிக்கிருன். 'அம்பை நொந்து கொள்வது ஏனோ?' என்பது குறிப்பு.



பி. ஸ்ரீ.

97. எல்லாம் ஆண்டவனுக்காகவே !

சேனாபதிக்குப் பின் மகோதரன் பேசத் தொடங்குகிறான். எடுத்த எடுப்பிலே, வஞ்சித்துச் சீதையைக் கவர்ந்தது 'அஞ்சினர் தொழில்' என்று சொல்லி விட்டானல்லவா சேனாபதி? வஞ்சனையைக் குறித்து அவ்வளவு இழிவான அபிப்பிராயம் மகோதரனுக்கு இல்லை.

இரண்டு குண சித்திரங்கள்

எப்படியானாலும் வெற்றி தானே இலக்கு? அதைப் புயவலிமை கொண்டு அடைந்தால் என்ன? அறிவுத் திறமை கொண்டு அடைந்தால் என்ன? எனவே அறிவுத் திறனை வெளியிடக் கூடிய வஞ்சனைத் தொழிலும் ஒரு கலை தான்; சேனாபதி கருதுவது போல் கேவலம் 'அஞ்சினர் தொழில்' அன்று. இது மகோதர சித்தாந்தம்.

கொலைக் கருவியை வீசி ஊரைக் கலங்கச் செய்வது போல் வஞ்சனையால், மாயையால், பிற உள்ளங்களை ஒரு கலக்குக் கலக்கிப் பார்ப்பதில் மகோதரனுக்கு மகா திருப்தி. இந்தக் கருவியை எவர் மீதும் பிரயோகித்துப் பார்க்க அஞ்சுவதில்லை இவனுள்ளம்.

இலங்கையின் அரண் முதலியவற்றைக் கூறுமாறு வினவிய ராமனுக்கு அனுமன் உத்தரம் சொல்லும்போது மகோதரனைக் குறித்துப் பின்வருமாறு பேசுகிறான் :

தாயை ஆயினும்
சலித்திடு வஞ்சனை
தவிரா
மாயை யான்உளன்
மகோதரன் என்றொரு
மறவோன்.

[சலித்திடு —கலங்கச் செய்யக் கூடிய. தவிரா – நீங்காத. மாயையான் – மாயை உடையவன். மறவோன் – பராக்கிரம சாலி.]

சேனாபதியாகிய பிரகஸ்தனைப் 'பிரகத்தன் என்றொரு பித்தன்' என்று ராமனிடம் தெரிவிக்கிறான். தேவேந்திரனை ஐராவத யானையுடன் வலி குலைந்து ஓடச் செய்து வானவர்களை இருக்கை விட்டு நிலை குலைந்து அலையச் செய்து விட்ட அந்த ராவண திக் விஜயத்திலே இந்தச் சேனாபதி சோனாமாரியாகச் சுடு கணைகளைப் பொழிந்தானாம். ஆனால் சொல்மாரி பொழியும் ஆற்றலோ, சொல்லம்புகளைக் குறி தவறாது எய்யும் ஆற்றலோ, வஞ்சனையாக வெற்றி பெறும் ஆற்றலோ பிரகஸ்தனிடம் காணப்படவில்லை.

மகோதரனும் சேனை காவலனைப் போல் இந்த மந்திராலோசனையில் சுருக்கமாகத் தான் பேசுகிறான். ஆனால் சொற்கள் குறி தவறாமல் பாய்ந்து ராவணன் உள்ளத்திலே மகோதரனுக்கு ஒரு சிறப்பான ஸ்தானத்தை ஏற்படுத்துவதற்கு உதவுகின்றன.

இனி இம் மகோதரன் எவ்வளவு சாதுரியமாகப் பேசுகிறானென்பதைப் பார்க்கலாம். சேனை காவலன் எழுந்து இறைஞ்சி வணக்கமாக ஆரம்பித்த போதிலும் அது பணிவுரையாக அமையாது தற்பெருமை உரையாகவே வளர்ந்து முற்றுப் பெறுகின்றது.

மகோதரனோ வணக்கம் செலுத்தாமலே கருத்தை வெளியிடத் தொடங்கி விடுகிறான். எனினும் ராவணனுக்கே பெருமையெல்லாம் உரியது என்பது போலப் பேசுகிறான்.

கோபமாகத் தான் பேசுகிறான்; காரசாரமாகவும் பேசுகிறான். சேனை காவ

லன் கூறிய முடிவுடன் தன் பேச்சையும் தொடுத்து விடுவது போலத் தான் பேசுகிறான். ஆனால் ராவணனுடைய கொற்றத்திலே (அதாவது, ராவணனுடைய வன்மையிலும் வீரத்திலும், அரசியல் மாட்சியிலும்) தன்னை இழந்து விட்டது போலப் பேசத் தொடங்குகிறான் :

மற்றவன் பின்னுற
மகோத ரப்பெயர்க்
கற்றடந் தோளினன்
எரியும் கண்ணினன்,
முற்றுற நோக்கினன்,
'முடிவும் அன்னதால்,
கொற்றவ! கேள்' என
இனைய கூறினன்.

[மற்று அவன் பின்னுற – அந்தச் சேனாபதிக்குப் பின்னாக. கல் தடந் தோளினன் – கற் பாறை போன்ற பெரிய தோளையுடையவன். முற்றுற நோக்கினன் – மந்திராலோசனை மண்டபம் முழுதும் ஒரு பார்வை பார்த்து. அன்னதால் – சேனாபதி கூறிய அதுவேயாம்.]

சேனாபதியின் பேச்சுத் தொடக்கம், ராவணன்மீதே குற்றப் பத்திரிகை படிப்பது போலக் காணப்பட்டது. மகோதரனோ ராவணனுடைய கொற்றத்தை வற்புறுத்தியே பேச்சைத் தொடங்குகிறான் :

தேவரும் அடங்கினர் ;
இயக்கர் சிந்தினர்
தாவருந் தானவர்
தருக்குந் தாழ்ந்தனர்;
யாவரும் இறைவர்
என்(று)
இறைஞ்சு மேன்மையர்
மூவரும் ஒடுங்கினர்
உனக்கு,மொய்ம்பினோய்

[இயக்கர் சிந்தினர் – யட்சர்கள் சிதறி ஓடினர். தாவருந் தானவர் – வலிமை பொருந்திய அசுரர்கள். தருக்கு – செருக்கு. மேன்மையர் மூவர் – மேன்மையுடைய மும்மூர்த்திகளும். மொய்ம்பினோய் – வலிமை படைத்தவனே.]

இத்தகைய கொற்றவன் யமனுக்கும் யமனாகத் தன் ஆட்சியையும் மாட்சியையும் நிலைநிறுத்தி வருகிறானும் :

கூற்றும்நீ தன்உயிர்
கொள்ளும் கூற்றெனத்
தோற்று,நின் ஏவல்தன்
தலையில் சூடுமால்!

[கூற்றும் – யமனும். சூடுமால் – தலை ஏற்றுச் செய்வான்.]

கூற்றையும் கொல்ல வல்ல ராவணேசுவரன் பரமேச்வரனையும் என்ன பாடுபடுத்தி விட்டான். 'உலகில் இரண்டு ஈச்வரர்களுக்கு இட மில்லை' என்று கருதியது போல் வெள்ளியங்கிரியை அந்தக் கிரீசனோடு தூக்கிப் பந்தாடினானும் :

வெள்ளியங் கிரியினை
விடையின் பாகனோ(டு)
அள்ளி,விண் தொடஎடுத்(து)
ஆர்த்த ஆற்றலாய்!

[விடையின் பாகனோடு – ரிஷப வாகனமுள்ள சிவபெருமானோடும். அள்ளி – லேசாகத் தூக்கி. விண் தொட – வானத்தையே தொடுவது போல. ஆர்த்த – ஆரவாரம் செய்ய; ஜயகோஷம் செய்ய.]

இத்தகைய கொற்றவன், 'சுட்டது குரங்கு...' என்றெல்லாம் வருந்துவதைப் பொறுக்க முடியவில்லையாம் மகோதரனால்.

சுள்ளியில் இருந்துறை
குரங்கின் தோள்வலிக்(கு)



எள்ளுதி போலும்நின்
புயத்தை எம்மொடும்.

[சுள்ளி – (இங்கே) மரத்தின் சிறுகிளை. உறை – வசிக்கின்ற. எள்ளுதி போலும் – குறைத்துச்



சொல்லுவாய்போலும். நின் புயத்தை – உன் புய வலிமையை.]

'வெள்ளிமலையை விண்தொட எடுத்து வீசிய தோள்வலி எங்கே. சுள்ளிக் கிளை முறிந்தால் விழுந்து அழியக் கூடிய அற்பக் குரங்கு எங்கே!' என்று கூறிய தற்கு மேல் வேறு என்ன சொல்லக் கூடும்? மகோதரன் முடிவுரைக்கு வந்து விடுகிறான் :

'இடுக்(கு)இனி இயம்புவ(து)
என்னை? ஈண்(டு)எனை
விடுக்குவை யாம் எனில்,
குரங்கை வேரறுத்(து)
ஒடுக்கரு மனிதரை
உயிருண்(டு) உன்பகை
முடிக்குவன் யான்'என
முடியக் கூறினான்.

[இடுக்கு – மனம் இடுங்குவதற்குக் காரணமான சங்கடம். என்னை–எதற்கு; எதற்காக. ஈண்டு – இப்போது. எனை விடுக்குவை யாமெனில்–என்னை அனுப்பு வாயே யானல். ஒடுக்கரு மனிதரை – ஒடுக்குவதற்கு அரியதென்று கருதப் படும் மனிதரை. முடியக் கூறினன் – கூறி முடித்தான்.]

முடிவுரையில், தானே பகையை முடித்து விடுவதாக மகோதரன் சொன்ன போதிலும், அதையும் ராவண னுடைய கொற்றத்திற்கு அடங்கிய பெருமை தான் என்பதை வற்புறுத்து வதற்காக 'ஈண்டு எனை விடுக்குவை யாமெனில்' என்கிறன்.

எப்படியும் குரங்குகளையும் ராம லட்சு மணரையும் தேடிச் சென்று கொன்று தீர்த்துவிட வேண்டும்; அவர்கள் படை யெடுத்து வரும்வரை நாம் பொறுத்தி ருக்கலாகாது என்ற முடிந்த முடிபில் மகோதரனும் சேனுபதியின் கருத்தைத் தான் ஆமோதிக்கிறன். எனினும் போர்ப் பித்தனுகிய சேனுபதியின் குணசித்திரம், 'வெற்றிக்குப் போர்வெறி தான் ஒரே வழி என்பதில்லை. வஞ்சனையும் கருவி தான்' எனக் கருதுகிற மகோதரனுடைய குணசித்திரத்தி லிருந்து வேறுபாடு உடையது தான். இந்த வேறுபாடு இருவர் உரைகளிலும் தொனிக்கக் காண் கிறேம்.

ஆண்டவனும் ராவணனே!

சேனுபதியைக் காட்டிலும் முக்கிய மான கதாபாத்திரம் மகோதரன். இவ னுடைய குணசித்திரம் 'மாயா ஜனகப் படல'த்தில் நன்கு வளரக் காண்கிறேம். ராவணன் இச்சைக்கு இசைய ஆலோ சனை சொல்லக் கூடியவன் மகோதரன் என்பதை அங்கும் காண்கிறேம். மகோ தரன் இல்லாமல் மாயா ஜனக நாட கத்தை ராவணன் சீதை கண்முன் நடத்தியிருக்க முடியாது.

முதல் நாள் யுத்தத்தில் ராவணன் பரிபவம் அடைந்து, மீண்டதும் சோர் வில் ஆழ்ந்து போகிறன். அப்போது ராவணனுடைய பாட்டனுகிய மாலிய வான் வந்து புத்தி சொல்லுகிறன். அச் சமயம் மகோதரன் தான் மாலியவானை யும் தியெழ நோக்கி அதட்டத் துணி கிறவன். ராவணனுடைய கவலையைப் போக்கிப் போரைத் தொடர்ந்து நடத்த உபாயம் சொல்லுகிறன்.

அந்த நிலையில் மகோதரனை 'மாயை கள் பலவும் வல்ல மகோதரன்' என் கிறன் கவிஞன். அந்தச் சமயத்தில் மகோதரன் பேசும் பேச்சிலும் ராவண னுடைய கொற்றத்தின் மாட்சியிலே இவனுக்குள்ள ஈடுபாடு நன்கு புலனு கிறது.

அச்சமயம் அந்தப் பேச்சைக் கேட்ட ராவணன் மகோதரன் சொன்னதை மெச்சி இவனுக்குப் 'பேரறிவாளன்' என்று ஒரு பட்டத்தையும் சூட்டுகிறன். தளர்ந்த மனம் கிளர்ந்த குதூகலத்திலே விநாச காலத்திற்கு இசைய விபரீத புத்தி சொன்னவனை நோக்கி, 'நீ சிறந்த செயலை அறிகின்ருய். நீ எல்லாச் செல் வமும் பெறுதற்கு உரியவன்' என்று கொண்டாடுகிறன். மகோதரன் தன் னிடம் வைத்த அன்பிற்கு எல்லை யில்லை யென்று பரவசமாகிறன்.


ஆனல் மந்திராலோசனை மண்டபத் தில் மகோதரன் இப்போது பேசிய தற்கு ராவணன் ஒன்றுமே பதில் சொல்லவில்லை, இன்னும் சோர்வு நீங்க வில்லை. எனினும் சேனுபதி பேச்சைக் காட்டிலும் அதிக அளவில் கவனித்துக் கேட்டான் என்று கருதலாம்.

ராவணனை மகோதரன் தெரிந்து கொண்டிருக்கும் அளவிற்குச் சேனுபதி முதலானவர்கள் தெரிந்து கொள்ள வில்லை யென்று கருதுவதும் பொருந்து வதே. அதனல் ராவணன் புகழையும் கொற்றத்தையும் காப்பாற்றுவதில் இவன் பிறர் செய்யத் துணியாத காரி யத்தையும் துணிந்து செய்து விடுவான்.

இந்திரஜித்தன் இறந்த தனிப் பெருஞ் சோகத்திலே ராவணன் சீதையைக் கொன்று விடுவதாக வாளுங் கையுமாய் ஓடுகிறன். அப்போது மகோதரன்தான் துணிந்து குறுக்கிட்டுப் புத்தி சொல்லி ராவணனைத் தடுத்து விடுகிறன். அங்கே கவிஞன் 'மகோதரன் துணிந்த நெஞ் சன்' என்கிறன்.

கேட்டிலும் துணிந்து நின்று வஞ்சனை யாலும் வெற்றி பெறுவதையே குறிக் கோளாகக் கொண்ட மகோதரன், 'மன்னு, கேடு வந்து விட்டதே உன் புகழுக்கு!' என்று துடிக்கிறன், ராவ ணன் சீதையைக் கொல்லத் துணிந் ததும்.

ராவணன் புகழை, கொற்றத்தைக் காப்பாற்றுவதில் ராவணனைக் காட்டி லும் ஆத்திரம் மகோதரனுக்கு. அத் தகைய துடிப்பின் விதையை இந்த மந்திராலோசனைப் பேச்சில் காண்கி றேம். விளைவைச் சீதையைக் காப்பாற் றும் முயற்சியில் காண்கிறேம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

98. புழுக்கம், புயல், இடி

சேனாபதியும் மகோதரனும் பேசி முடிந்ததும் சிலர் வெறி கொண்டவர்களைப் போல், 'மனிதரையும் குரங்கையும் பூமியில் தேய்த்து விடுங்கள்; தின்று விடுங்கள். ஆலோசனையே இப்போது அனாவசியம். நாம் நம்முடைய உணவைக் கண்டு அஞ்சுவோமா! இக் கடல் நீந்துதல் அரக்கர்களுக்கு அரிதோ! குரங்கு இட்ட தீயிலே வெந்ததோ அரக்கர் வெம்மையும்!' என்றெல்லாம் பேசுவாராயினர். அனுமன் வைத்த தீ கோபத் தீயாகி மந்திராலோசனை மண்டபத்தையும் சுட்டுப் பொசுக்குகிறதோ எனத் தோன்றுகிறது.

இக் குழுவினரில் முதன் முதல் பேசியவன் வச்சிரதந்தன். கடைசியாகப் பலர் குரல்களும் புற்றுப் பாம்பு போலக் கிளம்பிச் சீறத் தொடங்குகின்றன.

வச்சிரதந்தனின் கண்கள் புதிய இரத்தத்தை வெளியே கக்குவது போலச் சீறி விழிக்கின்றனவாம்: கோபத்தால் அதிக வார்த்தைகள் வெளிப்படவில்லை. சொற்களைப் பீறி உடைத்துக் கொண்டு பெருகுகிறது வெஞ்சினம்.

மூச்சுத் திணறல் போல் வார்த்தைத் திணறலும் ஏற்படுகிறது.

> இச்சிரந் தவன்உரைந்(து)
> இறுக்கும் எல்லையில்,
> வச்சிரத்(து) எயிற்றவன்
> வல்லை கூறுவான்

[இச்சிரத்தவன் – இந்தத் தலைமை பெற்ற மகோதரன். உரைத்து இருக்கும் எல்லையில்–பேசித் தங்கும் அளவில். வச்சிரத்து எயிற்றவன் — வச்சிரம் போன்ற பற்களையுடைய வச்சிரதந்தன். வல்லை – விரைந்து.]

என்றவாறு, அவன் ஓய்ந்து இவன் பேசத் தொடங்கும் போதே நெறு நெறுவென்று பற்களைக் கடிக்கும் ஓசையும் காதில் வந்து விழுவது போல் செய்யுளடிகளின் ஓசைப் பொலிவு அமைந்திருக்கிறது.

துர்முகன் முதலானோர்

வச்சிரதந்தன் தன் சொற்பப் பேச்சையும் பேசி முடிப்பதற்கு முன்பே 'நில்லு, நில்லு' என்று அவனை விலக்கித் துன்முகன் ஒரு சொல்மாரி பொழிந்து விடுகிறான். இவனுக்கு வார்த்தைப் பஞ்சம் இல்லை: ஒரு வகை நகைச் சுவைக்கும் பஞ்சமில்லை.

இவனது பேச்சுத் தொடக்கத்தைக் கேளுங்கள் :

> திக்கயம் வலியில;
> தேவர் மெல்லியர்;
> முக்கணான் கயிலையும்
> முரண் இன் றாயது;
> மக்களும் குரங்குமே
> வலியர் ஆமெனின்,
> அக்கட இராவணற்(கு)
> அமைந்த ஆற்றலே!

[திக்கயம் – திக்கஜங்கள். வலிஇல – வலிமை இல்லாமற் போயின. மெல்லியர் – வன்மை ஒடுங்கியவராயினர். முக்கணான் – 'கண்சுமந்த நெற்றிக் கடவுள்' என்று போற்றப்படும் சிவபெருமானுடைய. முரண் இன்றாயது – வலிமையற்றதாகி விட்டது. அக்கட – அதிசயத்தைக் குறிக்கும் பிறமொழிச் சொல்.]

இவனுடைய ஹாஸ்ய உணர்ச்சி தான்· நாம் நம்முடைய உணவுக்கே பயப்படுவோமானால்,

> 'தின்னிய அரக்கரில்
> தீரர் யாவரோ'

என்றும் பரிகசிக்கச் செய்கிறது. 'ஆழி நீந்துதல் ராட்சஸர்களுக்கு அரிதோ!' என்றும் கேட்கச் செய்கிறது.

இந்தப் பேர்வழி திடீரென்று ஹாஸ்யப் பேச்சை நிறுத்திக்கொண்டு மற்றை அரக்கர்களைப் போல் கோபமாகவே பேசி முடித்து விடுகிறான். 'நில்லு, நில்லு' என்று தொடங்கியவன் 'சொல்லு, சொல்லு' என்று தன் துணிபை விளக்கமாய்க் கூறி முடிக்கிறான்.

உண்மையில். துர்முகன் தானாகத் தன் பேச்சை நிறுத்திவிடவில்லை. 'நீர் பேசியது போதுமையா!' என்று வேறொரு அரக்கன் கைகாட்டித் துர்முகனை வாய்மூடச் செய்கிறான். ராவணன் பார்க்கும்படியே இக்காரியத்தைச் செய்கிறான். எனினும், இவனும் புதிதாக ஒன்றும் சொல்லி விடவில்லை. தனக்கு முன் பேசியவர்களை ஒட்டித்தான் பேசுகிறான் — 'நரரொடு குரங்கையும் கொன்று தின்று...' என்றெல்லாம்.

பல்லைக் கடித்தல், எரியும் கண்ணோடு நோக்குதல், அறிவைப் புகைக்கும் வார்த்தைகளைக் கொட்டுதல், வெறுத்துப் பேசுதல், எஜமான மரியாதையையும் மறந்து ஒறுத்தல், உறுக்குதல் முதலான அம்சங்களில் எல்லாம் இந்த அரக்கர்களுக்கிடையே வேறுபாடு விசேஷமாய்க் காண்பதற்கில்லை. பிசாசன் பேசுகிறான்; சூரிய சத்துருவும் வேள்வியின் சத்துருவும் பேசுகிறார்கள். தூமிராட்சன் (புகை நிறக் கண்ணன்) பேசுகிறான். எல்லாரும் புகைந்து பொங்குகிறார்கள். — ஒரே கோபத் தீயின் நாக்குகள்! ஒரே பாப சமுத்திரத்தின் பேரலைகளும் சிற்றலைகளும்! எல்லாரும் ஒரு குலம், ஒரு நிறை, ஒரு விலை!

புயல் வீசுகிறது!

மற்றையோரும் படமெடுத்த பாம்புகள் போல எழுந்து விஷாக்கினியைக் கக்கவும் ஒரே புழுக்கமாகி விட்டது மந்திராலோசனை மன்றம். இந்தப் புழுக்கத்திலே காற்று வீசுவது போலத் தொடங்குகிறது கும்பகர்ணன் பேச்சு:

ஆசில்பர தாரமவை
அஞ்சிறை அடைப்பேம்;
மாசில் புகழ் காதலுறு—
வேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை
பேணுவது காமம்;
கூசுவது மானுடரை;
நன்று நம கொற்றம்!

[ஆசு இல் – குற்றம் இல்லாத. அஞ்சிறை – அழகிய சிறை. நம கொற்றம்–நமதுவெற்றி]




ஆனால் இது இந்த ராவண சகோதர னின் ஒரு பாதி மன நிலைதான். மற்றொரு பாதி, 'இந்த நிலையில் சீதையை விட்டு விட்டால் என்ன?' என்பதைத் துருவி ஆராய்ந்து பார்க்கிறது. 'இதற்கு முன்பே சீதையை விட்டிருக்க வேண் டும்; ஏன், அவளைக் கவர்ந்து சிறை வைத் ததே பெருந் தவறு. ஆனால், இனி விட் டாலும் பெருந் தவறுதான்!' என்பதே இவனது மன நிலை.

சீதையை விட்டு விட்டால் பிறர் ஏள னம் செய்வார்களாம். எனவே, அது குறித்து இப்போது ஆலோசித்துப் பார்ப்பதில் பயனில்லை: போர் புரிந்து பார்க்க வேண்டியது தான்:

சிட்டர்செயல் செய்திலை;
 குலச்சிறுமை செய்தாய்;
மட்டவிழ் மலர்க்குழலி-
 னளை இனி மன்னா!
விட்டிடுது மேல், எளியம்
 ஆதும்; அவர் வெல்லப்
பட்டிடுது மேல், அதுவும்
 நன்றுபழி அன்றால்!

[சிட்டர் செயல்-பெரியோர் செய்கின்ற செயல். மட்டு அவிழ் மலர்க் குழலினள்-சீதை. விட்டி டுது மேல் - விடுவோமென்றால். எளி யம் ஆதும் - எளிமையை உடையவர் ஆவோம்.]

'ஆலோசனை மன்றத்தில் சொற் போராட்டம் செய்வதற்கு மாறாகப் போர்ப் பறைகள் முழங்க வேண்டும்' என்கிறான் கும்பகர்ணன். அந்தப் போரில் அரக்கர்களுக்குத் தான் நிச்சய மாக வெற்றி கிடைக்கும் என்பதையும் இவன் நம்பவில்லை. காட்டிலே பதினலா யிரம் சேனையோடு வந்து பொருத கரனை ஒருவனாகவே ராமன் வதஞ் செய்து விட்டானல்லவா? ராம தூதனாக வந்த ஒரு குரங்கே என்ன பாடு படுத்தி விட்டது? எனவே, கும்பகர்ணன் வெற்றி



தோல்வி குறித்துத் துணிந்து கூற இயலாமல் திணறுகிறான்.

ஆனால் வீரனுக்கு வெற்றிதானே குறிக்கோள்! எப்படியும் போராடிப் பார்க்காவிட்டால் மனித – வானரப் பகைவர்களுடன் தேவர்களும் சேர்ந்து கொள்ளக் கூடுமே! 'ஆகவே போர் வேண்டும்; போரே வேண்டும்! போருக்காக எதிரிகள் இலங்கை வந்து சேரும் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை!' என்கிறான் கும்பகர்ணன்.

வென்றிடுவர் மானுடவ
  ரேனும்,அவர் தம்மேல்
நின்(று)இடை விடாதுநெறி
  சென்றுற நெருக்கித்
தின்றிடுதல் செய்கிலம்
  எனில்,செறுந ரோடும்
ஒன்றிடுவர் தேவர்; உல(கு)
  ஏழும்உடன் ஒன்றும்.

[தின்றிடுதல் – (இங்கே) ஹிம்ஸித்தல். செறுநரோடும் – பகைவரோடும்.]

பலனைக் கருதாமல் கடமையைச் செய்ய வேண்டும்; பலனைத் தெய்வத்திற்கே அர்ப்பணம் செய்துவிட வேண்டும் என்கிறோமல்லவா? அத்தகைய கீதோபதேசம் செய்பவனைப் போல் கும்பகர்ணனும் பேசுகிறான் இப்போது. எனினும் முடிவுரையில் உடனே புறப்பட்டுப் போய்த் தாக்கினால் பகைவர்களை வேரோடு அழித்து விடுவதும் சாத்தியமே என்கிறான் இவன்.

'ஊறுபடை ஊறுவதன்
  முன்னம்ஒரு நாளே
ஏறுகடல் ஏறினர்
  வானரரை எல்லாம்
வேறுபெய ராதவகை
  வேரொடும் அடங்க
நூறுவது வேகருமம்'
  என்பது நுவன்றான்.

[ஊறுபடை – மேன் மேல் பெருகி வருகிற சேனை. வேறு பெயராத வகை – வேறு இடத்துக்கு ஓடிப் போய் விடாதபடி மடக்கிக் கொண்டு. அடங்க – ஒருசேர. நூறுவதுவே – அழிப்பதே. நுவன்றான் – சொன்னான்.]

கும்பகர்ணனின் முன்னுரை ராவணனுக்கு எவ்வளவோ கசப்பாகத் தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் முடிவுரையோ, 'எப்படியும் என் தம்பி வல்லவன் தான்; பொல்லாத சூரன் தான்' என்றெல்லாம் குதூகலப்படுத்தி விடுகிறது.

'ஒரு நாள் போருக்குப் புறப்பட வேண்டியது தான் விரைவில்' என்கிறானல்லவா கும்பகர்ணன்? ராவணனோ 'இன்றே போருக்குப் புறப்படுவோம்' என்று துடிக்கிறான்:


'நன்றுரைசெய் தாய், குமர!
  நான்இது நினைந்தேன்:
ஒன்றும்இனி ஆய்தல்பழு(து)
  ஒன்னலரை யெல்லாம்
கொன்றுபெயர் வோம்; நமர்
  கொடிப்படையை எல்லாம்
இன்றெழுதல் நன்றெ'ன
  இராவணன் இசைத்தான்.

[குமர – பிள்ளாய். ஒன்னலரை – பகைவர்களை. பெயர்வோம் – மீளக்கடவோம். நமர் – நம்மவர்.]

'குமர!' என்று ராவணன் எவ்வளவு அன்போடு தம்பியை விளிக்கிறான், பாருங்கள்! கும்பகர்ணன் கண்டித்துச் சொன்னதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்போது விபீஷணனின் மனநிலை எப்படி இருந்திருக்க வேண்டும்!

கவிஞன் இது குறித்து ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் வாசகர் ஊகஞ் செய்து கொள்ள இடம் இருக்கிறது. 'சீதையை விட்டு விடுவது எளிமை, அல்லது தோல்வியை வெளியிடுவதேயாகும்' என்றானல்லவா கும்பகர்ணன்! 'அது எளிமை யல்ல, வலிமைதான்; தோல்வி யல்ல, வெற்றிதான்' என்று குறுக்கிட்டுச் சொல்லக்கூடியவன் தான் விபீஷணன்.

'சீதையை ராவணன் கவர்ந்து சிறை வைத்திருப்பது அடாத செயல் என்பதை அண்ணனும் ஒப்புக் கொள்கிறானே' என்று விபீஷணன் வியந்து மகிழ்ந்திருக்கும்போதே மடமடவென்று கும்பகர்ணன், 'இனி நாம் சீதையை விட்டால் அது எளிமைதான்' என்ற தன் கொள்கையை வெளியிட்டு விடுகிறான். அதை ராவணன் ஆமோதித்து, 'இன்று எழுதல் நன்று' என்று இசைவதும் விரைவில் நிகழ்கின்றது. இச்சமயம் விபீஷணன் குறுக்கிட்டுக் கண்டிப்பான் என்றே எதிர் பார்க்கிறோம். ஆனால், அதற்குள் ஓர் இடிச் சிரிப்பு; இடிக் குரலும் முழங்குகிறது. இந்திரஜித்தும் பேசத் தொடங்கி விட்டான்.



பி. ஸ்ரீ.

99. கருத்திலானுக்குக் கண்ணிலான் உதவி

ராமன் முதலானவர்கள் படையெடுத்து வருவதற்கு முன்பே அரக்கர்கள் கடல் கடந்து போய்ப் பகைவர்களை அழித்து விட வேண்டும் என்றல்லவா சொல்லி முடித்தான் கும்பகர்ணன்? அது கேட்ட ராவணனும் 'அப்படியே புறப்படுவோம்; இன்றே போருக்குப் புறப்படுவது நல்லது' என்று சொல்லி விட்டான். இந்தத் தீர்மானம் இந்திரஜித்தனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

விதி சிரிக்கிறது

ராவண மாட்சி எங்கே, மானுடர் தாழ்ச்சி எங்கே! ராவணேசுவரனா அற்ப மானுடன் மீது படையெடுத்துப் போவது! இது ராவணனுக்கு மட்டுமா எளிமை விளைக்கும்! அரக்கர்கோனின் ஆணையைத் தலைமீது தாக்கிப் பகை வெல்லும் வல்லமை படைத்த அரக்கர்களுக் கெல்லாம் அவமானம் விளைக்கக் கூடிய செயலல்லவா! இது இந்திரஜித்தின் மனநிலை.

'நீ இங்கே இலங்கையில் தான் இருக்க வேணும்; நான் உன் பகைவர்களை யெல்லாம் கொன்று தீர்த்து ராமலட்சுமணரின் தலைகளை உன் திருவடியில் காணிக்கையாகக் கொண்டு வந்து போடுவேன்' என்று சபதம் செய்கிறான் இந்திரஜித்து. விதி சிரிக்கிறது.

ஏன்! நடக்கப் போவதுதான் என்ன! லட்சுமணன் இந்திரஜித்தின் தலையை அறுத்துத் தள்ள, அத்தலையை அங்கதன் தூக்கிக் கொண்டு வந்து ராமன் திருவடியில் காணிக்கையாக அல்லவா சமர்ப்பிக்கப் போகிறான்! விதி இப்படித் திட்டமிட்டிருக்க, இந்திரஜித்தின் மதி இப்போது எப்படித் திட்டமிடுகிறது பாருங்கள்!

'நான் அம்பு போடப் போட அற்ப வானரங்கள் பல்லைக் கடித்த வண்ணம் சத்தமிட்டு வாயை இளித்துக் கொண்டு ஓடப் போகின்றன; அதையும் நீ காணப் போகிறாய்' என்று பேசுகிறான் இந்திரஜித்து.

மேலும் மேலும் பொங்குகிறது கோபம்:

யானை இலர், தேர்புரவி
யாதும்இலர், ஏவும்

தானை இலர், நின்றதவம்
ஒன்றும்இலர் தாமோ,

கூனமுது சின்சிறு
குரங்குகொடு வெல்வார்?

ஆனவரும் மானுடர்; நம்
ஆண்மைஅழ கன்றோ?

[புரவி – குதிரை. ஏவும் – நம்மேல் ஏவக் கூடிய. தானை – (இங்கே) காலாட் படை. ஒன்றும் இலர் தாமோ – சிறிதும் இல்லாதவருமான தேவர்களா. ஆனவரும் – அவர்களும்.]

அற்ப மானுடர் என்று ராமலட்சுமணரைக் குறிப்பிடும் இந்திரஜித்து அளவிற் பெரிய உருவங்களைப் பெருமை வாய்ந்தன என்று மதிக்கிறான். செயலின் அளவையும் பேராற்றலுக்குரிய அங்கமாக மதிக்கிறான்.

பேசுவது மானம்; இடை
பேணுவது காமம்;

கூசுவது மானுடரை;
நன்றுநம கொற்றம்!

என்று கும்பகர்ணனும், 'நமது வீர பராக்கிரமம் நன்றாயிருக்கிறது!' என்றானல்லவா? இந்திரஜித்தும் 'நம் ஆண்மை அழகன்றோ!' என்று பேசுகிறான்.

இந்திரஜித்து பின் வருமாறு பேசிக் கொண்டே போகிறான்:

நீரும்நில னும்நெடிய
காலும்நிமிர் வானும்

பேருலகில் யாவும்ஒரு
நாள்புடை பெயர்த்தே

யாரும்ஒழி யாமைநரர்
வானரரை எல்லாம்

வேரும்ஒழி யாதவகை
வென்றலது மீளேன்!

[நிலனும் - நிலமும். காலும் - காற்றும். பேருலகில் யாவும் - இந்தப் பெரிய உலகில் உள்ள எல்லாவற்றையும். ஒரு நாள் புடை பெயர்த்தே - ஒரு நாள் நிலைபெயரச் செய்து. யாரும் ஒழியாமை - எவரும் மிஞ்சாதபடி. வேரும் ஒழியாத வகை - வேரும் மிச்சமாகாத வகையில்.]

ஏதோ ஒரு போர் செய்வது போலவே தன் சொற்போரையும் நடத்தப் பார்க்கிறான் இந்திரஜித்து. எனினும் விற்போரில் நிகரற்ற வல்லமை படைத்தவனுக்குச் சொற்போரிலும் வல்லமை இருக்க வேண்டுமென்பதில்லையே. உண்மையில், இந்திரஜித்தின் சொல்லம்புகள் குறி தவறாது பாய்ந்தன என்று சொல்ல முடியாது. ராவணனை இந்திரஜித்தின் பேச்சு வசீகரித்து விட்டது என்று கருதுவதற்கும் இடமில்லை.

வில் நாணை இழுத்து மேன்மேலும் அம்புகள் போடுவதுபோல் சொல்லையும் இழுத்து இழுத்து வீசிக் கொண்டே இருப்பதில் திருப்தி பெறாதவனாகி, இந்திரஜித்து உடனே செயலில் இறங்கி விடத் துடிக்கிறான். ராவணனது அடிகளில் வணங்கி எழுந்து, 'விடை தருவாய், இப்போதே புறப்படுவதற்கு' என்று வேண்டிக் கொள்கிறான்.

விபீஷணன் அதட்டுகிறான்

இந்திரஜித்தின் இந்தத் துடிப்பைக் கண்டதும் விபீஷணனுக்குக் கோபமே வந்து விடுகிறது. தீவினையை வென்ற இந்த நல்லறிவாளனும் கொதித்து உதட்டைக் கடித்துப் பேசுகிறான்.





இந்திரஜித்தைக் கற்பிலாப் பாலன் (கல்வியறிவில்லாத சிறுவன்) என்று எடுத்த எடுப்பிலேயே கண்டிக்கிறன். மேலும் இந்திரஜித்தை நோக்கிச் சொல்கிறன் :

கருத்திலான் கண்ணிலான்
ஒருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திரம்
அனைய செப்புவாய் ;
விருத்நர்மே தகையவர்
வினைஞர் மந்திரத்(து)
இருத்தியோ ? இளமையால்
முறைமை எண்ணிலாய் !

[கைக்கொடு–கைக் கொண்டு. திருத்துவான் சித்திரம் – திருத்துகிறவனுடைய சித்திரத்தை. அனைய செப்புவாய் – ஒத்த பேச்சைப் பேசுகிறுய். விருத்தர் – வயது முதிர்ந்தவர்கள், மேதகையவர் – மேன்மையான குணங்களை உடையவர்கள். வினைஞர் – செயல் திறமுள்ளவர்கள். மந்திரத்து – அப்பேர்ப்பட்டவர்கள் இருக்க வேண்டிய மந்திராலோசனைச் சபையிலே. இருத்தியோ – நீ இருப்பதற்குத் தகுதியுள்ளவனே. முறைமை எண்ணிலாய் – சொல்ல வேண்டிய முறையும், செய்ய வேண்டிய முறையும் அறியாதவனே.]

கருத்து இல்லாதவன் சித்திரம் எழுதுகிறன். அந்தச் சித்திரத்தைக் கண் இல்லாத ஒருவன் கையைக் கொண்டு திருத்தவும் செய்து கொள்கிறுனும். இது தான் தந்தையின் மந்திராலோசனை – விவகாரத்திலே தலையிடும் இந்திரஜித்தின் உதவி என்கிறன் விபீஷணன்.

கடைசியாக விபீஷணன் குழந்தையை அதட்டும் தாய் போல் இந்திரஜித்தை அதட்டிப் பேசிவிட்டு, அண்ணனை நோக்கிப் பெரும் பணிவுடன் பேசத் தொடங்குகிறன் :

'பிள்ளைமை விளம்பினை
பேதை நீ !'என
ஒள்ளிய புதல்வனை
உரப்பி, ' என்உரை
எள்ளலை யாம்எனின்,
இயம்பல் ஆற்றுவன்
தெள்ளிய பொருள்'என
அரசற் செப்பினுன்.

[பிள்ளைமை – சிறுபிள்ளைத் தன்மை. விளம்பினை – இப்படிச் சொன்னுய். பேதை நீ – அறிவில்லாதவனுகிய நீ. ஒள்ளிய புதல்வனை – வலிமையுள்ள மகனுன இந்திரஜித்தை. உரப்பி – அதட்டிவிட்டு. என் உரை – என் பேச்சை. எள்ளலை யாம் எனின் – இகழாதிருப்பாயாயின். இயம்பல் ஆற்றுவன் – இயம்புவேன் ; சொல்வேன். தெள்ளிய பொருள் – நான் தெளிந்து காணும் பொருளை. அரசற் செப்பினுன்–அரசனுக்குச் சொல்வானுயினுன்.]

பணிந்து பேசுகிறான்.

ராவணன் எத்தனையோ தவறுகள் செய்திருந்தும், அத் தவறுகளின் சிகரமாகச் சீதையை அபகரித்து வந்திருந்தும், 'அண்ணனைத் திருத்தலாம்; என்னால் திருத்த முடியாதா? பார்க்கலாம்' என்ற எண்ணத்துடனும் நம்பிக்கையுடனுமே விபீஷணன் இன்னும் ராவணனை விட்டுப்போய் விடவில்லை.

இந்த மந்திராலோசனையை ஒரு வாய்ப்பாகக் கொண்டு தமையனைத் திருத்தித் தானாக வேண்டும் என்ற சங்கற்பத்துடன்தான் சபைக்கே வந்திருக்கிறான்.

கும்பகர்ணனைப் போல் விபீஷணனுக்கும் தமையனிடம் அன்பு உண்டு. கும்பகர்ணனைக் காட்டிலும் விபீஷணனுக்கு அண்ணன் மீது பக்தி விசுவாசம் உண்டென்று சொன்னாலும் மிகையாகாது.

எந்தைநீ ; யாயும் நீ ;
எம்முன் நீ; தவ
வந்தனைத் தெய்வம்நீ ;
மற்றும் முற்றும் நீ

[யாய் – தாய். தவ வந்தனை – தவத்தினால் வந்தனை செய்வதற்குரிய. முற்றும்– எல்லாப் பொருளும்;]

என்று எவ்வளவு பக்தியோடு பேசத் தொடங்குகிறான் இப்போது!

ஸத்தியாக்கிரகத்தின் ஒரு வகைத் தத்துவம்

இதே விபீஷணன் தான் பிறகு, 'அவன் என் அண்ணனுமில்லை, என் அரசனுமில்லை' என்று இந்திரஜித்திடம் சொல்லப் போகிறான். இதை 'விபீஷண ஸத்யாக்கிரக தத்துவம்' எனக் கருதலாம்.

இவ்வளவு பெரும்பணிவுடனும் பக்தி விசுவாசத்துடனும் தான் பேசத் தொடங்கிய போதிலும், 'அண்ணன் பொல்லாத கோபக்காரன், பிடிவாதக்காரன்; சமாளிப்பது எளிதன்று' என்பதை யெல்லாம் அறிந்தவன் தான் விபீஷணன்.

தத்துவஞானி; லௌகிக ஞானமும் உள்ளவன் தான்.

கற்றுறு மாட்சிஎன்
கண் இன்(று) ஆயினும்,
உற்றுறு பொருள்தெரிந்(து)
உணர்தல் ஒயினும்,
சொற்றுறு சூழ்ச்சியின்
துணிபு சோரினும்,
முற்றுறக் கேட்டபின்
முனிதி மொய்ம்பினோய்!

[கற்றுறுமாட்சி – கற்றதனால் பொருந்தும் பெருமை. என் கண் இன்று ஆயினும் – என்னிடம் இல்லையென்றாலும். உற்றுறு பொருள் – இப்போது நேர்ந்துள்ள விஷயத்தை. தெரிந்து உணர்தல் ஒயினும் – பூர்ணமாக ஆராய்ந்து உணர்ந்து கொள்ளும் அறிவு எனக்கு இல்லாவிட்டாலும். சொற்றுறு சூழ்ச்சியின் – பல விதமாகச் சொல்லியுள்ள மந்திராலோசனையின். துணிபு சோரினும் – துணிவை அறிவதில் நான் சோர்வுபட்டவனாயிருந்தாலும். முற்றுற – முழுதும். முனிதி – கோபித்துக் கொள்வாய். மொய்ம்பினோய் – வல்லமையுள்ளவனே.]

இத்தகைய பீடிகையுடன் விபீஷணன் சொல்லப்போகும் அறிவுரையை இனிமேல் கேட்கப் போகிறோம்.

கருத்திலான் எழுதிய சித்திரத்தைக் கண்ணிலான் திருத்திய கதைதான் இந்திரஜித்தின் பேச்சு என்றல்லவா சொன்னான்? அதே சித்திரத்தை அறிவுக் கண் படைத்த இவன் என்ன செய்யப் போகிறானோ, பார்க்கலாம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

100. தோல்விதான் வெற்றி !

மந்திராலோசனை மன்றத்திலே ராவணன் வந்து அமர்ந்ததும் மந்திரிமாரிடம், 'எதற்காக ஆலோசனைக் குழு கூடியிருக்கிறது'' என்பதைத் தெளிவு படுத்தியிருக்க வேண்டுமல்லவா? அப்படித் திட்டமாக ஒரு பொருளையும் அரக்கர்கோன் குறிப்பிட வில்லை.

மீண்டும் எரியூட்டு படலமா?

'சுட்டது குரங்கு' என்று தொடங்கியவன், சுடச் சுடத் தன் வயிற்றெரிச்சலை அப்படியே கொட்டினான் அந்த மன்றத்திலே. 'அந்தக் குரங்கு செத்தது, நாயாலோ, அல்லது மனப் பேயாலோ அல்லது தற்கொலையாலோ, என்று கூடக் கேள்விப்பட்டோமில்லையே' என்று ஏங்கி ஓய்ந்து அப்படியே சாய்ந்து விட்டான் சிங்காதனத்திலே.

உடனே சேனைநாயகன் முதலானவர்கள் குறுக்கிட்டு, கோடை வெயிலில் தவித்துக் கொண்டிருந்த குன்றின் மீது சோனமாரியாக நெருப்பு மழை கொட்டுவது போலத் தங்கள் வயிற்றெரிச்சலையும் ஆசை முறிவுகளையும் சேர்த்துக் கொட்டி அபிஷேகம் செய்து விட்டார்கள்.

இந்திரஜித்தும் நெருப்பு மலையாக நிமிர்ந்து தன் இதய தாபமாகிய நெருப்புப் பிரவாகத்தையும் 'நயகரா' அருவி போல் கொட்டத் தொடங்கினான். குரங்கு சுட்டதற்கு மேல் எரியூட்டப் படுகிறது ஆலோசனை மன்றம்!

இந்த நிலையில் பரமசாதுவான விபீஷணனும் கோபாக்கினி ஜொலிக்கத்தான் தொடங்கினான்; பல்லைக் கடித்துக் கொண்டுதான் சொல்பவனானான் ஆனால் தீவினையை யெல்லாம் வென்றவனல்லவா! தீ ஒத்த கோபத்தைத் தீவினை மீது திருப்பி விட்டான்!

தீவினையின் தீ நாக்கைப் போல் கொதித்துக் குதித்த இந்திரஜித்தைக் 'கற்பிலாப் பாலன்' ('உனைத் திருப்பிப் பாலர் பள்ளிக்குத் துரத்த வேண்டியது தான்!') என்று சொல்லிச் சிறுவரை அதட்டுவது போல் அதட்டிப் பேசலானான் விபீஷணன்.

என்றாலும் புதல்வன் அல்லவா! அந்த அபிமானமும் தோன்றவே அதட்டினான். அடக்கினான். இதில் அதிசயம் என்ன வென்றால, அது வரையில் அந்தச் 'சித்தப்பா'வின் முகத்தில் கடுகளவும் கோபத்தையே கண்டிராத அந்தப் புதல்வனும் திகைத்து அடங்கினான். ஒடுங்கினான். விபீஷணன் மூட்டிய தீ சுட்டது; புண்ணாகியது; ஆனால் மகனையோ தந்தையையோ ஒளிவிடும் பொன்னாக்கவில்லை.

விபீஷணன் புத்தி

தமையனை நோக்கியதும் விபீஷணன் பெரும் பணிவுடன் தன் கருத்தைத் தெரிவிக்கிறான். ராவணனைப் போல தனக்குக் கல்வி மாட்சி இல்லை யென்பதைத் தான் எப்படித் தெளிவு படுத்துகிறான் பாருங்கள்!

உண்மைதான். விபீஷணன் மாட்சி கல்வி மாட்சியன்று. கல்வியறிவையும் கடந்து நிற்கும் மெய்யறிவு அல்லவா! எனவே, கும்பகர்ணன் இவனை,

கவிஞரின் அறிவு
மிக்காய் !



[கவிஞரின் - கவிஞர்களைப் போல்.]

என்று அழைக்கிறான் (கும்பகர்ணன் வதைப் படலம்).

விபீஷணன் கவிஞர்களைப்போல் உள்ளொளியும் மெய்யறிவும் அமையப் பெற்றவன் என்பது கருத்து. இதுதானே உண்மைக் கல்வி!

ஆராய்ச்சி யறிவுத் திறனும் தனக்கு அதிகமாக இல்லை என்கிறான் விபீஷணன். உள்ளொளி யல்லவா வழி காட்டுகிறது இவனுக்கு? அமைச்சனுக்குரிய ஆலோசனைத் துணிவிலும் தான் சோர்வு பட்டவன் என்கிறான்.

எனவே பேச்சில் பலவகைக் குறைகள் இருக்கலாம். எனினும் முற்றவும் கேட்க வேணும் என்கிறான். 'வேணுமானால் பிறகு கோபித்துக் கொள்; இடையிலே குறுக்கிட்டுத் தடுத்துவிடாதே' என்பது வேண்டுகோள்.

ராவணனும் இணங்கியது போல் கேட்டுக் கொண்டிருக்கிறான். உள்ளம் எதிர்த்த வண்ணமாகவே குமுறிக் கொண்டிருக்கிறது.

'இது உனக்கு ஒரு நீண்ட கயிறு; வேணுமானால் சுருக்கிட்டுக் கொள்' என்பது போலத்தான் ராவணன் மனநிலை!

விபீஷணன் ராவணனை நோக்கி என்ன தான் சொல்லுகிறான் இப்போது? 'சுட்டது குரங்கு' என்றும், 'கெட்டது கொடி நகர்' என்றும் சொன்னவனை நோக்கி. அந்தப் பேச்சிலே முழு உண்மையும் இல்லையென்கிறான் விபீஷணன்.

கோநகர் வெந்தது மட்டுமா? சுட்டதும் குரங்கு தானா? பார் இதோ:

கோநகர் முழுவதும்
 நினது கொற்றமும்,
சானகி எனும்பெயர்
 உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால்
 வெந்தது அல்லது(ஓர்)
வானரம் சுட்டதென்(று)
 உணர்தல் மாட்சியோ?

[கோநகர்-ராஜதானியாகிய இலங்கா நகரம். நினது கொற்றமும் - உன்னுடைய வீரப் பிரதாபமும். தம்மனை ஆனவள்-தாயானவளின். மாட்சியோ-உன் அறிவு மாட்சிக்குப் பொருந்துவதோ.]

தன் கொடி பறந்து கொண்டிருக்கும் கோநகர் வெந்ததே என்று கவலைப் பட்ட ராவணனை நோக்கி, 'உன் வீர பராக்கிரமமுமே வெந்து நீறாகி விட்டதே!' என்கிறான் விபீஷணன். ஒரு முரட்டுக் கயிறு வெந்து போனாலும் கயிற்றின் வடிவம் காணப்படுகிறதல்லவா!

கை தொட்டால் உதிர்ந்து போகும். இதுதான் ராவண வீரத்தின் இப்போ



துள்ள நிலை என்கிறான் விபீஷணன். ராமன் அம்பு தொட்டாலே போதுமாம்.

'குரங்கு சுட்டது' என்பதையும் விபீஷணன் ஆட்சேபிக்கிறான். ஜானகியின் கற்புத் தீயல்லவா சுட்டு விட்டது!



டிருக்கிறோமே!' என்றான் கும்பகர்ணன். வீரதர்மத்திற்கு இழுக்கு நேர்ந்து விட்டதே என்று நொந்து பேசினான்.

எனினும் சீதையை இப்பொழுது விட்டு விடுவதும் வீரத்துக்கு இழுக்கே என்று அபிப்பிராயப் பட்டான் கும்பகர்ணன். இது தோல்வி – மனப்பான்மையைத் தான் வெளியிடும் என்பது கும்பகர்ணன் கொள்கை.

விபீஷணனோ, 'பெருந் தவறு செய்து விட்டாய் (காந்தி – பாஷை



'உன் கோநகரையும் உன் வீர பராக்கிரமத்தையும் எந்தக் குரங்கு தான் சுட்டெரிக்க முடியும்!' என்கிறான்.

'அண்ணா இவ்வளவு தானா உன் அறிவின் மாட்சி!' என்று கேட்கிறான், தனக்குக் கல்விமாட்சி இல்லையென்று தொடங்கிய சாது.

வெளித் தோற்றம் வெண்ணெய்; உள்ளே வைரம் – இது விபீஷணனைப் போன்ற – காந்தி மகானைப் போன்ற – சாதுக்களின் நிலை.

கும்பகர்ணனும் விபீஷணனும்

சீதையைக் கவர்ந்தது தவறு என்றே கும்பகர்ணனும் ஏற்கெனவே சொல்லி விட்டான். 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்பது போல் 'மாசில்லாத புகழிலும் ஆசை கொண்



யில் இமாலயப் பெருந் தவறு); எனினும் தைரியமாகக் குற்றத்தை உணர்ந்து ஒப்புக் கொண்டு சீதையை விட்டு விட வேண்டியதுதான். இது தோல்வியாகாது; இதுவே வெற்றி!' என்கிறான்.

எது வெற்றி?

காந்தியடிகளின் தனிப் பெருங் கொள்கையை நினைவூட்டும் விபீஷண வாசகம் இது!

'இசையும் செல்வமும்
உயர்குலத்(து) இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும்
மீக்கொளக் கிளையொடு மடியாது
அசைவில் கற்பின்அவ்
அணங்கைவிட் டருளுதி ; அதன்மேல்
விசையம் இல்' லெனச்
சொல்லினன் அறிஞரின் மிக்கான்.

[இசை-புகழ். உயர்குலத்து இயற்கை-நீ உயர் குலத்தவனென்று பெருமை பாராட்டிக் கொள்கிறாயே, அந்தக் குலத்திற்குரிய இயற்கைச் சூழ்நிலைப் பண்பாடு. எஞ்ச-ஒழிய. மீக்கொள-மிகுதியாக. கிளையொடு - சுற்றத்தாருடனும். அசைவில் - அசைக்க முடியாத. அவ் அணங்கை - அந்தத் தெய்வ மகளையொத்த சீதையை. விட்டருளுதி- விட்டிடுவாய். அதன்மேல்-அதைக் காட்டிலும்: விசையம்-வெற்றி. இல் என - இல்லை என்று. அறிஞரின் மிக்கான் - அறிஞர்களில் சிறந்தவனாகிய விபீஷணன்.]

இது ஒரு மகாத்மாவின் பேச்சு—இல்லையா! கம்பனுடைய விபீஷண குண சித்திரத்தை உணர்ந்து கொள்வதற்கு இதை ஒரு திறவுகோல் என்றே சொல்ல வேண்டும்.

இனி இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் சபை எந்த நிலையில் இருக்கிறது, ராவணன் எந்த நிலையில் இருக்கிறான் என்று பார்ப்போம்.

விபீஷண கோபமாகிய தர்மாவேசத்திற்கு முன்பு இந்திரஜித்தும் மதியிழந்து வாயிழந்து ஒடுங்கி நிற்கிறான். இந்த ராட்சஸ சபையும் இப்போது திகைத்து அடங்கிப் போகிறது, விபீஷணனது உள்ளொளியிலிருந்து ஓர் அழகு மிக்க சுடர் போலத் தெறிக்கும் இந்த முடிவுரைக்கு முன்னே.

ஒரு மகாத்மாவின் தர்மாவேசத்திற்கு முன் ஏகாதிபத்திய மாட்சியே கூசிக் குலைந்து போனதைக் கண்டதில்லையா? பாம்பு படம் விரிப்பது போல விரிகின்ற தீவினை மாட்சி கருடனைக் கண்ட சர்ப்பம் போல் இப்போது ஒடுங்கிப் போகிறதோ!

ஆனால் இந்தத் தர்ம வசீகர சக்தியை, ஒரு குலுக்குக் குலுக்கி ஒழித்து விடுகிறது, ராவணன் பேச்சன்று, ராவணன் குரலன்று, ராவணன் சிரிப்பு.

சிரிப்பின் சக்தி

சிரிப்பிலேதான் எவ்வளவு சக்தி! திரிபுரம் எரித்தது விரிசடைக் கடவுள் சிரித்த சிரிப்பே! பாஞ்சாலியின் சிரிப்பே ஒரு பாரதம்!

கவலையால் இடுங்கிய கண்கள் சிரிப்பால் மலரும்; இரத்த ஓட்டத்தை ஜீவநதியாக ஓடச் செய்யும்; வளம் தரும்: வனப்பும் தரும்; மானமும் தங்கிடும்...... ஆனால் இந்த ராவணன் - சிரிப்பு!

கார்லைல் ஒரு ஜெர்மன் பேராசிரியரைக் குறித்துக் கற்பனை செய்திருக்கிறான், வாழ்க்கையிலே ஒரு தரம் தான் சிரித்தாரென்று.

ஏக காலத்தில் இருபத்தைந்து குதிரைகள் கனைப்பது போலிருந்ததாம்.

உதட்டிலே தவழும் மந்தமாருதச் சிரிப்பன்று, முழு உடம்பும் ஒருங்கு சிரித்த சண்டமாருதச் சிரிப்பு ராவணன் சிரிப்பு:

கேட்ட ஆண்தகை
கரத்தோடு கரதலம் கிடைப்பப்
பூட்டி, வாய்தொறும்
பிறைக்குலம் வெண்ணிலாப் பொழிய,
வாள்-த டந்திகழ்
ஆரமும் வயங்கொளி மார்பும்
தோள்-த லங்களும்
குலுங்கநக்(கு) இவைஇவை சொன்னான்.

[கிடைப்பப் பூட்டி - பொருந்த அறைந்து, இரு கைவிரல்களையும் இறுகப் பூட்டிக்கொண்டு. பிறைக்குலம்-பிறைச் சந்திரன்போன்ற வக்கிரதந்தம். வாள்தடந்திகழ் ஆரமும் - ஒளி வீசுகின்ற முத்தாரமும். வயங்கு - அதனால் விளங்குகின்ற, நக்கு - சிரித்து.]